விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR

ஓர் நற்செய்தி!

மில்க்வைற் நீல சோப் மேலுறைகளுடன் இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது! மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி மிகச்சிறந்த பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

மலர் 19 | பங்குனி 7 | ரபீஉல் 29 | ஞாயிற்றுக்கிழமை | [20—3—77] | இதழ் 38

# ‘வட்டுதீர்மான அடிப்படையில் பிரதமருடன் பேசினோம்!’

## கந்தர்மடம் கருத்தரங்கில் அமிர்தலிங்கம் தகவல்

வண்ணார்பண்ணை, சனி பிரதம மந்திரியுடன் அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் நடத்திய பேச்சின் போது வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையிலேயே தாம் கருத்துக்களை தெரிவித்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ.அமிர்தலிங்கம் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கந்தர்மடம் பலாலி றோட் பிள்ளையார்கோவில் முன்றலில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில் திரு.அமிர்தலிங்கம் உரையாற்றினார். முன்னாள் யாழ். மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான திரு. சி. நாகநாசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பல நூற்றுக் கணக்கான இளைஞர் கள் கலந்து கொண்டனர். வீதியின் இருமருங்கிலுமிருந்து வந்துகொண்டிருந்த பலவிதமான கேள்விக்கடதாசிகளை கையில் வாங்கி வைத்துக் கொண்ட திரு. அமிர்தலிங்கம் அக்கேள்விகளுக்கு பதில் கொடுத்தவாறே இரண்டரை மணிநேரம் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நாம் அந்நிய ஆட்சியில் பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டிருந்தபோது எமது நிலம் பறிபோகவில்லை. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களால் நாம் ஆளப்பட்ட 30 ஆண்டுகளில் எமது நிலத்தில் அரைப்பங்கை இழந்துவிட்டோம்.

இன்று இளைஞர்களையும் எம்மையும் பிரித்தாள சிலர் சதி செய்கின்றனர். உண்மையில் எமது விடுதலைப்பாதைக்கு எமது இயக்கம் போதாதது என்பதை நாங்கள் உணர்கின்றோம். படிப்படியாகவே அது உயரும்.

### முன்னர் மறுத்த பிரதமர்

தனிநாட்டுக் கொள்கையுள்ளவர்களுடன் எதுவித பேச்சுவார்த்தையும் நடத்த மாட்டேன் என்று சில தினங்களுக்குமுன்வரைகூறியபிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று எம்மை அழைத்துப்பேச தானகவே முன் வந்தார். இந்நிலை எமது இளைஞர்களது [illegible] தால்தான் ஏற்பட்டது. இது இளைஞர்களது போராட்ட வெற்றியாகும்.

நாம் இந்த அரசுடன் மட்டும் பேசப் போவதில்லை. பேச்சுவார்த்தைக்கு வரும் எந்த அரசுடனும் சரி எந்த கட்சியுடனும்சரி நாம் பேசத் தயாராக இருக்கின்றோம். எமது நிலையிலிருந்து நாம் நழுவாமலேதான் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றோம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்தே இப் பேச்சுவார்த்தையில் நான் கருத்துக்கள் தெரிவித்தேன். மற்றவர்கள் மற்றும் சில கருத்துக்களைத் தெரிவித்தனர். தொடர்ந்து பேச சந்தர்ப்பம் கிடைத்தால் பேசுவோம். பேசுவதன்மூலம் நாம் எமது நோக்கிலிருந்து வழுகிவிடுவோம் என்று தமிழ் மக்கள் கருதிவிட முடியாது. எங்கள்மீது நம்பிக்கை உள்ளவர்கள் ஒரு போதும் அப்படிக் கருதமாட்டார்கள்.

### மலையகத்தமிழர்

தனிநாடு அமைந்தால் மலையகத் தமிழர்களது நிலை என்ன? என்று சிலர் கேட்கின்றனர். பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்தபோது இந்தியாவில் இருந்த முஸ்லீம்களின் நிலை என்ன? பாகிஸ்தான் தனிநாடு அருகில் இருக்கிறது என்ற தைரியத்துடன்தான் முஸ்லீம் மக்கள் இந்தியாவில் வசிக்கின்றனர்.

### எனது தொகுதியை விட்டுக்கொடுக்கவும் தயார்

எம்மை இயக்குவிக்க இளைஞர்கள் முயல்வது தவறல்ல. அவர்கள் இயங்கினால்தான் நாமும் இயங்க முடியும். பாராளுமன்றம் எமக்குத் தேவையில்லை. ஆனால் எமது [illegible] அந்நியர் புகுந்து விடக்கூடாதென்ற காரணத்தால்தான் தேர்தலில் போட்டியிடுகின்றோம். வட்டுக்கோட்டைத் தொகுதியில் கூட்டணிக்கு வேட்பாளர்கள் ஒருவருமில்லை என்று கூறித்தான் என்னை நிறுத்த முயல்கின்றனர். எனது தொகுதியில் ஒரு இளைஞன் கேட்க முன்வந்தால் நான் [illegible]ருந்து ஒதுங்கிவிடுவேன். பாராளுமன்ற ஆசனம் எனது கட்சி வேலைகளுக்கு [illegible] இடையூறாக இருக்கிறது.

## கருணாநிதி எம். ஜி. ஆர். பேட்டிகள்

இந்திய லோகசபை தேர்தல் தொடர்பாக இப்பொழுது தமிழ்நாட்டிலிருக்கும் நமது விசேஷ நிருபர் அ. இ. அ. தி. மு. கழகத்தின் தலைவர் எம். ஜி. ராமச்சந்திரனையும், தமிழக தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியையும் நேரில் கண்டு எடுத்த ‘பேட்டி’கள் நாளை ‘ஈழநாடு’ ஏட்டில் இடம் பெறும்.

## யாழ், லயன் விழாவில் இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். லயன் களியாட்ட விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் யாழ். திறந்த வெளியரங்கில் மங்கள இசையுடன் ஆரம்பமாகின்றன.

செல்வி மஞ்சுளா துஷ்யந்தி ஜெயரட்னத்தின் வீணைக்கச்சேரி, பொம்மலாட்டம். ‘டிரெகுலா’ நாடகம். ஏ.ஈ. மனோகரனின் பொப்பிசை. ‘சோக்கல்லோ சண்முகம்’ நாடகம் ஆகியனவும் விழாவில் இடம் பெறும்.

யாழ் புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக

யாழ் லயன் களியாட்டு விழா

போட்டியோ: மாட்டுவண்டிச்சவாரி
- இரட்டை மாட்டுவண்டி
- ஒற்றை திருக்கல் வண்டி

பிரதம விருந்தினரோ! லயன் பிரான்சிஸ் வர்ணகுலசூரியா

இடமோ: யாழ். முற்றவெளி மைதானம்
காலமோ: 20-3-77 ஞாயிற்றுக்கிழமை
நேரமோ: மாலை 2 மணி
பங்கு பற்றுபவர்களோ: மாலை 1 மணிக்கு சமுகந்தாரீர்
பரிசில்களோ: கவர்ச்சியானவை
பிரவேசமோ:
- போட்டியாளர்களுக்கு-ரூபா 10/-
- பார்வையாளர்களுக்கு-இலவசம்

ரசிகர்களோ: திரண்டுவாரீர்
நடாத்தும் ஆதரவாளர்களோ: தங்களது

ரோரு ஸ்தாபனமாம்

# காசிஆனந்தனை வரவேற்க மக்கள்வெள்ளம் திரண்டது!

## ரயில் நிலையத்தில் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு கவிஞர் காசி ஆனந்தன் சிறை மீண்டபின் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்தபோது உணர்ச்சியும், உற்சாகமும் நிறைந்த இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து யாழ். புகையிரத நிலையத்தில் எந்தத் தலைவருக்கும் இதுவரை அளித்திராத விதத்தில் அமோக வரவேற்பு அளித்தனர்.

யாழ் புகையிரத நிலையத்தில் வரவேற்க நின்றவர்களில் இருவர் நெரிசலில் சிக்கி மயக்கமடைந்தனர்.

வழக்கமாக நண்பகல் 1-15 மணிக்கு வரும் யாழ்தேவி நேற்று மாலை 5-40 மணிக்கே யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தது.

வவனியாவிலிருந்து ஒவ்வொரு புகையிரத நிலையத்திலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரண்டு நின்று கவிஞரை வரவேற்றனர். வழக்கமாக யாழ்தேவி நிற்காத நிலையங்களிலும் நிறுத்தப்பட்டது.

### ரயிலில் உதயசூரியன் கொடி

கவிஞர் காசி ஆனந்தனுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யாழ்தேவியில் வந்தனர். புகையிரத என்ஜினில் முன்பக்கத்தில் ‘உதயசூரியன்’ கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. என்ஜினிலும் உதயசூரியன் கொடிகளுடன் இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

யாழ்தேவி புகையிரத மேடைக்கு வருமுன்னரே, இளைஞர்கள் ‘தமிழ் ஈழம்’ பெறுவோம் எனக் கோஷமிட்டனர்.

கவிஞர் காசி ஆனந்தனுக்கு யார் முதலில் மாலைசூட்டுவது

(10-ம் பக்கம் பார்க்க)

## கொங்கோ அதிபர் கொலை

லண்டன், மார்ச் 19 கொங்கோ அதிபர் திரு. மரியன் என்கோபே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

# சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

சில நேரங்களில் சில மனிதர்கள் 22-50, அர்த்தமுள்ள இந்துமதம் பாகம் III, 5-25, பாயும் ஒளி நீ எனக்கு 13-50, ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது 10-40, பாதித் தொகை முற்பணத்துடன் வரும் வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும். சித்திராலயா புக்ஹவுஸ், 38, வேம்படி வீதி, யாழ்.நகர். 5740

---

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மானிப்பாய் வீதியில் ஆறுகால் மடத்தடியில் இல. 12, லோட்டஸ் வீதி. 2 பரப்பு 3 குளி, வீடும், தென்னைகளும், விலை விபரங்களுக்கு: பொ. இராசரத்தினம், சக்தி அச்சகம், 253 1/1: ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5736

---

மானிப்பாய் – சங்குவேலி வீதியில் வீடு கட்ட வசதியான 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வண. சு. மனோ பவன், குருமனை, நவாலி, மானிப்பாய் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 5721

---

வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைக்கு அருகாமையில் ஊறணி குடியேற்றத் திட்டத்துக்கு முன்பாகப் பிரதான வீதியில் இரண்டுகடைக் கட்டிடம் உடனடியாக விற்பனைக்குண்டு. (வடக்கே கடல் உண்டு) இக்கடைக்கட்டிடத்தில் மில்போடுவதற்கு ஏற்ற மின்சார வசதி உண்டு. மீன் கருவாடு மொத்தமாக கொள்வனவு செய்து வியாபாரம் செய்வதற்கும் வசதியான இடம். நேரிலோ அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். திருமதி செல்லக்கதிரமலை, (சாமியார்) ஊறணி, வல்வெட்டித்துறை. 5704

---

நேஷனல், அம்பிளிபயர், ரேப்டெக், டெக்கோட் பிளேயர், எலெக்றிக் கிற்றர் இன்னும் பல மின்சார உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: 42/2, டெம்பிள் ரோட் லேன், யாழ்ப்பாணம். 5747

---

க. பொ. த. (சா/உ.) விண்ணப்பப் படிவங்கள் விபரங்களுடன் 50 சதம். தபாலில் பெற ஐந்து 15 சத முத்திரைகள் அனுப்புக. யாழ். சட்ட நிலையம், 71, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5746

## விற்பனைக்கு

''பெட்போர்ட்'' லொறியும், வான்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ஓட்டோஸ் லிமிட், 90, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5725

---

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பிய ஸ்ரண்டாட் ஆங்கில தட்டச்சு இயந்திரம் ரூபா 1050/- அல்லது கிட்டிய தொகை. செல்வாராஜன், செட்டித்தறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. 5733

## தேவை

ஆயுள்வேத வைத்தியர், ஆயுள்வேத வைத்திய உதவியாளர் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. கிழமை நாட்களில் காலை 9 மணி முதல் 12 மணிவரை நேரடியாகத் தொடர்புகொள்ளவும். விலாசம்: விவேகா இன்டஸ்றீஸ், செங்குந்தா வீதி, (நல்லூர் சந்தைக்கு முன்பு) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 5730

---

யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை. மின்சார, இரும்புபொருட்கள் விற்பனை செய்வதில் நன்கு அனுபவமும், G. C. E. பரீட்சையில் சித்தியெய்தியவராயும் வாடிக்கையாளரை திருப்திப் படுத்துவதில் தேர்ச்சியும் இருத்தல் வேண்டும். தொழில் நுட்பக்கல்லூரியில் மின்சாரவியல் சித்தியெய்தியிருப்பவர்க்கு முதலிடம் கொடுக்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5742 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 5742

---

படமாகாணம் முழுவதிலும் எமது விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய உதவியாளர்கள் தேவை. விண்ணப்பதாரர்கள் G. C. E. (O.L) படித்த விவசாயஅறிவும், விற்பனையைப் பெருக்கும் திறமையுடைய இளைஞர்களாக இருப்பதும், விரும்பத்தக்கது. தேர்ந்தெடுக்கப் பட்டோர், கடினஉழைப்புள்ளோராகவும் இருத்தல் வேண்டும். நம்பிக்கையுள்ள தோட்டவேலை அனுபவமுள்ள தோட்ட வேலையாள் தேவை சகலவிபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். மேற்பார்வையாளர், செங்கதிர்ச்செல்வர்பண்ணை, 70, புங்கன்குளம் ரோட், யாழ்ப்பாணம். 5741

## விற்பனைக்கு

டிறக்டர் பெட்டிகளுக்கான ரேஜைதக்கப்புகளும் துலாக்களும் விற்பனைக்குண்டு.

**ஸ்ரார்,** 233, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7352

2 குதிரைப்பவர் திறீபேஸ் மோட்டரில் இணைக்கப்பட்ட 2 இஞ்சி தண்ணீர்ப்பம்புகளும் விற்பனைக்குண்டு. 5731

---

# நான் இப்படித்தான் இந்தியா சென்றேன்

# இலங்கையரைத் தேடி அலைந்த இளைஞர்

**எஸ். கே. காசி**

ஜனவரி மாதம் 3-ம் திகதி சமயபுரம், திருவானைக்கால், உறையூர் போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள ஸ்தலங்களைத் தரிசித்தோம்.

சமயபுரம் செல்லும்வழியில் பெருமளவு நெற்காணிகள் தென்பட்டன. இந்திராவின் 20 அம்சத்திட்டங்களில் ஒன்றான உணவுற்பத்திப்பெருக்கத்தின் ஸ்திரமான நடவடிக்கைகளை இங்கு அவதானிக்க முடிந்தது.

திருச்சியிலிருந்து சமயபுரத்துக்குச் செல்லும் வழியில் ஓலையால் வேயப்பட்ட சினிமாக் கொட்டகை ஒன்றைக் கண்டோம்.

நமது நாட்டில் பேரியபெரிய கட்டிடங்களில் சினிமாத் தியேட்டர்களைக் கண்டுபழகிப் போன எமக்கு இது புதுமையாக இருந்தது. இந்தக் கொட்டகையில் கீழேஅமர்ந்து சினிமாக்காட்சிகளைப் பார்ப்பார்கள். பிரதான நகரங்களில்மட்டுமே சினிமாத் தியேட்டர்கள் பெரிய கட்டிடங்களில் அமைந்திருப்பதாகவும், சிறு சிறு கிராமங்களில் இவ்விதமான ஓலைக்கொட்டகைகள் தான் சினிமாத் தியேட்டர்களாக இருக்கின்றன என்றும் விசாரித்ததில் சொன்னார்கள்.

### சாதிக்காய் கேட்டார்

சமயபுரத்தில் பஸ்ஸுக்காக காத்து நின்றபோது நாம் இலங்கையர்என்பதை அறிந்து கொண்ட ஒருவர் எம்மிடம் சாதிக்காய் எடுக்கமுடியுமா என்று கேட்டார். இதை எதற்கு பயன்படுத்துகிறீர்கள் என்று கேட்டதற்கு 'லாலாண் தண்ணி' என்ற கள்ளச்சாராயம் தயாரிப்பதற்கு உபயோகிப்பதாகச் சொன்னார்.

அன்றிரவு சினிமாக்காட்சிக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தபோதிலும் களைப்பாய் இருந்தோம். அத்திட்டத்தை ரத்துச்செய்தோம்– நண்பர் சிவா அன்றிரவே சினிமாவுக்குச் செல்ல விரும்பியதால் அவர் தனியாகச் சென்றார்.

மறுநாள் அதிகாலையில் அழாக்குறையாக அவர் கூறிய கதை, பெண்களுக்கு இந்தியாவில் வழங்கப்படும் முன்னுரிமைச் சலுகையின் பயனை அனுபவரீதியாக அறியமுடிந்தது. 'பெண்களுடன் சென்றிருந்தால் டிக்கட் எடுத்திருக்கலாம். சிலோன் உல்லாசப் பிரயாணி என்று சொல்லிக் கூட, டிக்கட் பெற்றுக் கொள்ளமுடியவில்லை' என்று அவர் கூறியபோது அசடு வழிந்தது. பாவம் சிவா!

மறுநாள் ஜனவரி 4-ம் திகதி– அதிகாலை 5 மணியிருக்கும். நண்பர் சிவாவின் 34-ம் இலக்க அறையில் பேசிக் கொண்டிருந்தேன். அன்றைய 'புரூகிறும்' தயாராகிக் கொண்டிருந்தது.

எடுப்பான தோற்றமும், பார்ப்பதற்கு கள்ளம் கபடமற்ற ஓர் இளைஞர் அறை வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

'மன்னியுங்கள் சார்! நீங்க சிலோனா?'' என்று கதை கொடுத்தார். ஏன் கேட்கிறீர் என்றேன் நான்.

நேற்று முழுவதும் அன்ன ஆகாரமின்றி அலைகின்றேன், உங்களிடம் ஓர் உதவி கேட்க வந்துள்ளேன்... என்று இழுத்தார் அந்த இளைஞன்.

திருச்சியில் ஒவ்வொரு ஹோட்டல்களிலும் ஏறி இறங்கி, சிலோன் ஆட்கள் இருக்கிறார்களாஎன்றுபார்த்து உங்களைத் தேடிப்பிடித்தேன். ரிஷப்சனில் உள்ள போர்ட்டில் உங்கள் பெயர் விபரங்களைக் கண்டு இங்கு வந்தேன் என்று தொடர்ந்தார் அவர்.

திருச்சியில் இறங்கியதிலிருந்து குறிப்பிடத்தக்கதாக பிச்சைக்காரரை நாம் அங்கு காணவில்லை. முன்னரெல்லாம் இந்தியாவுக்குச் செல்லவிரும்புபவர்கள் அங்கு பிச்சைக்காரரின் கண்ணராவியைச் சகித்துக்கொள்ளமுடியாமல் பிரயாணத்தைக் கைவிட்டதை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

அந்த நிலையில் தமிழ்நாடு இப்போது இல்லை என்று துணிந்து சொல்லமுடியும். இப்படியிருக்க அதிகாலையில் எமக்குத் தொந்தரவு தர வந்துள்ள இந்த இளைஞர்......?

அந்த இளைஞன் தொடர்ந்தான்— ''கள்ளத்தனமாக

(9-ம் பக்கம் பார்க்க)

---

## தேவை

கோப்பாய் சந்தியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிற்கு காசாளர் உடனடியாகத் தேவைப்படுகிறது. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். நியூபரிஸ் ஹோட்டல், கோப்பாய் சந்தி. 5726

## கல்வி

'ஏட்டுச்சுரைக்காய்வெல்டிங் வேலை வாய்ப்புக்குதவாது' மெக்கானிக் எஞ்சினியரிடம் மட்டுமே வேலை அனுபவமிக்க கல்வியைப் பெற முடியும். எமது 3 மாத வெல்டிங் Arc & Gas பயின்று திறமையான வெல்டராகுங்கள். நியூ பிறில்லியன் இன்சிரியூட், ''திருத்தணிகை'', 284, பலாலி வீதி, கந்தர்மடம். (அரச அங்கீகாரம் பெற்ற தொழிற் பயிற்சி நிலையம்) 5688

## வகுப்புகள்

N.C.G.E. இரு தடவைகளும் பரீட்சைக்குத் தோற்றி தேர்ச்சியுறாத மாணவர்களை 1976 க. பொ. த. பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்கான விசேட வகுப்புகள் 1-04-1977 இல் ஆரம்பமாகும். யாழ். சட்ட நிலையம், 71, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5744

## CLASSES

G. A Q-English, Hindu Civilization Political Science, Economics, Geography, Tamil by University Lecturers. Classes on progress. Jaffna Law Centre, Main Street, Jaffna. 5745

## அறிவித்தல்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில் 4000-க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப்பத்திரங்கள் 25-3-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் சங்க காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களைப்பெற்றுக்கொள்ள விரும்புவோர் மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி, காரியாலய வேலைநேரங்களில்பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**பொதுமுகாமையாளர்**

5732

---


சிக்கனத்தின் சின்னம்
சிறப்பின் பிறப்பிடம்!

**ரெட் கவ் பிரான்ட் பட்டர்**
**SUBSTITUTE**

யாழ்.நகர் மக்களின் வசதிக்காக

- சிறீ சாயி ஸ்டோர்ஸ்
- செல்வமலர் கூல்பார்
- றிச் கோப்பி பார் RICH COFFEE BAR
- கென்வூட் கோப்பி KENWOOD COFFEE
- அண்ணா கோப்பி பார்
- ஜப்னா கூல் பார் JAFFNA COOL BAR
- ராஜா கிறீம் ஹவுஸ்
- றிக்கோ ஹோட்டல்

விற்பனைக்காக இருக்கிறது

தரமானது, சுவையானது, மலிவானது

15 பட்டர் லேபல்களை அனுப்பி அழகிய பட்டர் டிஷ் ஒன்றை இனமாகப் பெறுங்கள்.

தயாரிப்பாளர்:-

**ராஜா என்டர் பிறைசஸ்**
43, கண்டி ரோட் – கடவத்தை
கிளை: 19, வெலகெதர ரோட் — பதுளை.

தரமான பொருளுக்கு தரமான விலை

மக்களின் சிக்கன செலவிற்காக சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது


---

# யாழ். மாவட்ட மக்களுக்குச் சீமெந்து வழங்குதல்

எமது தொழிற்சாலையிலிருந்து சீமெந்து பெறும் முறையைச் சுலபப்படுத்தும் பொருட்டு, வருகின்ற ஏப்ரல் மாதம் 1-ம் திகதி தொடக்கம் பெர்மிற் மூலம் சீமெந்து விநியோகம் செய்யும் முறை அமுலாக்கப்படவுள்ளது. திகதியிடப்பட்ட சீமெந்து விண்ணப்பங்களை வைத்திருப்போர் அவற்றை எங்களிடம் சமர்ப்பித்துப் பெர்மிற்றுக்களைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். மார்ச் மாதம் 20-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதிவரை திகதியிடப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாத்திரம் பெர்மிற் இல்லாது சீமெந்து வழங்கப்படும்.

**தொழிற்சாலை முகாமையாளர்**

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1977-03-18. 5743

**குல தெய்வத்துக்கு வழங்கும் பாலில் தண்ணீரைக் கலந்து வைத்தது குற்றமா? அவள் ஏன் அப்படி செய்தாள்? அது அந்த ஆண்டவனுக்குத் தெரியாததா என்ன...?**

# தெய்வம் தந்த - பரிசு!



உள்ளத்தில் எழுந்த பயத்திலும், படபடப்பிலும் செய்வதறியாது கட்டிலிலே புரண்டுபுரண்டுபடுத்தாள் மீனு, பொழுது விடிவதற்கு இன்னும் நேரமிருந்தது. அதற்கிடையில் ஒரு மணி நேரமாவது தூங்கிவிடலாம் என்று எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தபோதும் தூக்கம் அவளை ஏமாற்றிச் சென்றது. அதே அறையில் படுத்திருந்த தாயார் பொன்னம்மாளின் குறட்டை ஒலி, அவளுக்குச் சினத்தைக்கொடுத்தது. மார்கழி மாதத்துக் குளிர் போர்வைக்குள் முடங்கிக்கொண்டு உறங்கிய மற்றவர்களுக்கு மீனுவின் கஷ்டம் தெரியவில்லை.

அவளது நினைவில் முதல் நாள் மாலை நடந்த நிகழ்ச்சிகளே வந்துகொண்டிருந்தன. எதை மறந்து உறங்கவேண்டும் என்று அவள் நினைத்தாளோ, அந்தநினைவு வெட்ட வெட்டத் தழைக்கும் மரம் போல மீண்டும் மீண்டும் வந்து தோன்றியது.

''நான் செய்தது குற்றமா? இல்லவேயில்லை, குற்றம் செய்யவில்லை' என்று தீர்மானித்த பின்னரே அக்காரியத்தைச் செய்தேன். அப்போ என் மனம் ஏன் பயப்படுகிறது? நான் தெய்வத்தோடல்லவா விளையாடிவிட்டேன். குல தெய்வம்! எங்களை வாழ்விக்கும் விநாயகப்பெருமான்! அவரை அல்லவா பரிகசித்துவிட்டேன். இதற்கு எனக்குத் தண்டனை கிடைக்குமா? கிடையாது. நான் பிழை செய்யவில்லை. இறைவனே என்னை மன்னிப்பார். நான் செய்தது குற்றமில்லை என்ற உள்ளுணர்வுடன்தான் செய்தேன். ஆனால் அம்மா அறிந்தால்...'

அந்த நினைவே மீனுவுக்கு நடுக்கத்தைக் கொடுத்தது. கண்ணை இறுக்கி மூடிய அவளுக்கு நித்திரையே வரவில்லை.

0 0 0

அந்த ஊரிலே மீனு குடும்பம் ஓரளவுக்குச் செல்வந்தர்கள் என்றுதான்சொல்லவேண்டும். கஷ்டம் தெரியாமல் வளரும் குழந்தைகள். மூத்த மகள் மீனு பி. ஏ பட்டதாரி. உத்தியோக வேட்டையில் கடந்த ஒரு வருடமாக ஈடுபட்டிருக்கிறாள். அவர்கள் வீட்டிற்குக் காலையிலும், மாலையிலும் பால் கறக்க வருபவன் கந்தசாமி. கூலிப் பிழைப்புச்செய்யும் அவனுக்கு இவர்கள் கொடுக்கும் சம்பளம் சொற்பம். ஆனால், அதனால் தனது குடும்பச்சுமையைக் குறைக்கலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு. பொன்னம்மாளுக்குமொழி வாதம்வந்தது முதல் கந்தசாமியே இவ்வேலையைச் செய்துவருகிறான். பிரயாசியான கந்தசாமி வேலையில் ஒழுங்கும், சுறுசுறுப்பும் உடையவன்.

அன்று காலை பாலைக் கறந்து கொடுத்தபின்னர் ஏதோ கேட்கும் பாவனையில் தலையைச் சொறிந்துகொண்டு நின்றான். இதனைக் கண்ணுற்ற பொன்னம்மாள் அவனைக் கவனியாதது போல பாசாங்குசெய்து கொண்டு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

''அ...ம்...மா'' ஏக்கம் கலந்த குரல் அடித்தொண்டையிலிருந்து வெளிவந்தது.

''என்ன கந்தசாமி'' அவனது முகத்தைப் பாராமலே பொன்னம்மா கேட்டாள்.

''கொஞ்ச நாளைக்குப் பால் வேணும் அம்மா என்ரை கடைக்குட்டிக்கு'' - தொண்டையில் சிக்கிய வார்த்தைகளைச் சமாளித்து ஒருவாறு கேட்டுவிட்டான்.

''ஏன்? ஒரு வயதாகுதல்லே. இனி எதையும் தீத்தலாமே? இந்தக் காலத்திலை பால் வாங்கிக் குடுக்கஉனக்குக்கட்டுமா?'' -புத்தி சொல்லும் பாவனையில் பொன்னம்மா சொன்னாள்.

''தீத்தாமலா அம்மா? மனுசி காய்ச்சலாகக் கிடந்த பிறகு தப்பரவாகப் பாலில்லை. குழந்தை அழுதபடி ஒருநேரமெண்டாலும் பால் குடுக்கலாம் எண்டு...'' -எதிர்த்துச் சொல்லத் தைரியமின்றி வார்த்தைகளை விழுங்கினான்.

''உனக்குத் தெரியாதா கந்தசாமி? ஐயாவச்ரூப் பால் வேணும். பிள்ளையளுக்கெண்டுதான் இந்தக் காலத்திலும் மாடு வளர்க்கிறன். மகள் விடுதலைக்கு வாறு. எத்தனைபேர் பால் கேட்டபடி. இதுகள் தெரிந்தும் நீ கேட்டால்...'' -அவன் வாய் திறக்க முன் பொன்னம்மாள் அறையினுள் சென்றுவிட்டாள்.

இப்படி எத்தனையோ தோல்விகளைத் தாங்கிக் கந்தசாமியின் உள்ளம் உரமேறியிருந்தது. குனிந்தபடியே சென்றுவிட்டான். பொன்னம்மாளோடு கோபித்தால் அவனுக்குத்தான் நட்டம்.

கந்தசாமி போவதைப் பார்த்துக்கொண்டிருந்த மீனுவுக்குஉள்ளத்தில் ஒருவேதனை. 'குழந்தைக்குத்தானே பால் கேட்டான்? அதைக் கொடுத்தால் என்ன?' தாயின் குணத்தை நன்கறிந்த அவளுக்கு, அவனுக்காகச் சிபாரிசு செய்யவும் பயமாக இருந்தது. என்றாலும் துணிந்து-

''அம்மா குழந்தைக்குத்தானே? கொஞ்சம் குடுத்திருக்கலாம்'' என்று தன்அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

''குடுக்கலாம்பிள்ளை, உனக்கு இந்த ஏழை எளியதுகளிடை குணம் தெரியாது. இண்டைக்குப் பால், நாளைக்கு அரிசி, சீனி இப்பிடி உயிரை வாங்கிப் போடுங்கள்.''

''அண்டைக்கு அவன்ரை மனுஷியை கண்டனான். எலும்புந் தோலும்தான். அவன் சொன்னது உண்மைதான். குழந்தைக்குஅவளிட்டை பாலிராது.''

மீனு கந்தசாமிக்காகப் பரிந்து பேசினாள்.

''இந்த வேலையை நீ பழகு பிள்ளை. அவனை நிப்பாட்டினால் இந்தத் தொல்லை இல்லை.''

''நான் 'போடிங்காலை' வந்த உடனே நினைத்தனான். ஆனால் நான் பால் கறந்தால் கந்தசாமி பாவம். அவன்ரை உழைப்பைக் கெடுக்கக் கூடாது.''

''ஊதாரிப்பிள்ளை. நீ எப்பிடிக் குடும்பம் நடத்தப் போறாயோ?'' மகளின் தாராள மனப்பான்மையை விரும்பாத பொன்னம்மாள் குறை கூறினாள்.

''சரியம்மா, பின்னேரம் கந்தசாமிக்கு கால்போத்தல் பால் குடுப்பம். அவன் கறக்கிறதாலைதானே ரெண்டு நேரமும் அரைப்போத்தலுக்குக் கிட்ட கூடக்கிடைக்குதெண்டு சொன்னனீங்கள். அதை அவன்ரை குழந்தைக்கே கொடுப்பம்'' பிரச்னைக்கு தீர்வு கூறினாள் மீனு.

''இதுகளைச் சேர்த்துப் போடாதை மேனை. கொஞ்ச நாளைக்கெண்டுதான் கேட்குங்கள். பிறகு கழட்ட ஏலாது. உனக்கு இதுகள் விளங்காது. போ பிள்ளை காலமை போய்ப் பாக்கிற வேலையைப்பார். இண்டைக்கு வெள்ளிக்கிழமை எனக்குக் கனவேலை கிடக்குது.''

தாயோடு வாதிட்டுத் தோல்வி கண்ட மீனுவுக்கு மனதில் ஒரே யோசனை. எப்படிக் கந்தசாமிக்கு உதவலாம்? அவள்மனம் ஒன்றிலும் செல்லவில்லை.

வழமைபோல் கந்தசாமி மாலை வந்து பாலைக்கறந்தான். ஒன்றும் கதைக்கவில்லை.

''பிள்ளை பாலை வாங்கி உள்ளே வை. நான் கோவிலுக்குப் பால் எடுத்தபின் மிச்சத்தைக் காய்ச்சு'' மகளுக்குச் சொல்லியவாறு செம்பையும், தட்டத்தையும் மினுக்குவதற்காக கிணற்றடிக்குச்சென்றாள்.

வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்குச் செல்லும் பொன்னம்மாள் பூவும், பாலும் கொண்டு போகத் தவறமாட்டாள். தங்கள் குடும்பத்திற்கு அந்த அப்பன் செய்யும் கைமாறற்ற அருளுக்குத் தன் நன்றியை இவ்விதமாகத் தெரிவிப்பதாக அவள் எண்ணினாள்.

தாய் கிணற்றடியால் வருவதற்குமுன் மகளின் மூளை தீவிரமாக வேலைசெய்தது.

கால் போத்தல் பாலை ஒரு போத்தலில் ஊற்றினாள். வெளிமுற்றத்தைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த கந்தசாமியைக் கூப்பிட்டு ''இந்தா அம்மா தந்தவ. பிள்ளைக்குக் குடுக்கட்டாம்'' என்று கொடுத்தாள்.

யோகேஸ் கணேசலிங்கம்

நன்றியுணர்வுடன் அவன் பாலை வாங்கினான். அவன் வாயைத் திறப்பதற்கு முன் அவள் குசினிக்குச் சென்றுவிட்டாள். காப்போத்தல் தண்ணீரைப் பால் செம்பினுள் ஊற்றினாள். அவள் எடுத்த பாலை அவள் ஊற்றிய தண்ணீர் சமனாக்கிவிட்டது.

இது ஒன்றுமறியாத பொன்னம்மாள், வழமைபோலக் கோயிலுக்குப் பால் கொண்டு சென்றாள். ஆனால் மீனுவின் மனம்தான் நிம்மதியற்றுத் தவித்தது. தனது செய்கை சரியா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். இரவு முழுதும் அவளால் தூங்க முடியவில்லை.

விடியற்காலைத் திருவெம்பாவைப் பூசைக்கு வெளிக்கிட்ட தாயாரோடு மீனுவும் கோயிலுக்கு புறப்பட்டாள். ''அம்மா காலையில்தான் நிம்மதியாகக் கும்பிடமுடியும், நானும் வருகிறேன்'' என்றமீனுவைப்பொன்னம்மாள் விருப்பத்தோடு கூட்டிச் சென்றாள்.

''பிள்ளை உன்ரை படிப்புக்கு ஆண்டவன் கெதியிலை ஒரு வேலையைத் தருவான். இவ்வளவு காலமும் வழிகாட்டிய பெருமான் இனி மேலும் காட்டுவான். நல்லாய்க் கும்பிடு'' -ஒன்றும்அறியாதபொன்னம்மாள் மகளுக்கு ஆறுதல் கூறினாள்.

கோயிலிலே பூசை நடைபெறுகிறது. பக்தர் குழாம் மெய்மறந்து கும்பிடுகிறது. அர்ச்சகர் காட்டிய தீபத்தின் ஒளியிலே விநாயகப் பெருமானின் முகத்தைப் பார்க்கிறாள் மீனு. அவளது குற்றமுள்ள நெஞ்சம், பெருமானைப் பார்க்கவே கூசுகிறது. ''அப்பனே! என்னை மன்னித்துவிடு; மனந்தெரிந்து உனக்குத் தண்ணீர் கலந்த பாலை அனுப்பினேனே? கையைக் கூப்பிய மீனுவின் கண்களில் கண்ணீர் பெருகியது.

(விநாயகப் பெருமானே! நான் பிழையா செய்து விட்டேன்'' -என்று மனதிலே கேட்டபடி இறைவனை உற்று நோக்கினாள் மீனு.

அர்ச்சகர் கையிலுள்ள தீபத்தின் ஒளி இறைவன் முகத்திலே விழுகிறது. அந்த முகத்திலே ஒரு அமைதி, ஆனந்தமான ஒரு சிரிப்பு. 'மீனு நீ செய்தது சரி' என்று அவள் குல தெய்வம் கூறுவது போல ஒரு பிரமை.

என்றுமில்லாத விதத்தில் மீனுவின் மனம் சாந்தியடைகிறது. பிரசாதத்தைக்கையிலே வாங்கியவள் கண்ணில் ஒற்றிக் கொள்கிறாள்.

வழி யெங்கணும் தாயாருக்கு நடந்ததைச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல். வார்த்தைகள்தொண்டைக்குள் சிக்கிக் கொள்கின்றன. 'எப்படித் தினமும் இந்த நாடகத்தை நடத்த முடியும்? அம்மா என்னை மன்னிக்க மாட்டாள். கந்தசாமியையே தண்டித்துவிடவும் கூடியவள். ஏதோ அந்த அந்த விநாயகர் வழி காட்டுவார்தானே. என்று நம்பிக்கையாக வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தாள்.

தந்திக்காரன் கொடுத்த தந்தியை வாசித்த தருமலிங்கம் 'மீனு' என்று சந்தோஷ மிகுதியால் கூவினார்.

''பிள்ளை உனக்கு வேலை கிடைத்து விட்டது. போன மாதம் நீ போன கந்தோரிலிருந்து தந்தி வந்திருக்குது. உடனே வேலையை ஏற்கட்டாம்.''

தந்தியை வாங்கியமீனு, ''விநாயகரே! இதெல்லாம் உன் விளையாட்டப்பா. என்னை மன்னித்தது மட்டுமன்றி எனக்கு ஒரு பரிசும் தந்து விட்டாய்'' -என்று கண்ணீர் மல்க கூறினாள். விநாயகர் மட்டுமல்ல மகள் கூறியவிபரங்களைக் கேட்ட தாயும் அவளைமன்னித்துவிட்டாள்.

மீனு கண்மூடி, மனம் குவித்து விநாயகப் பெருமானை வணங்கினாள். நிர்மலமான அந்தப் பெருமானின் திருமுகம் அவளது மனக் கோயிலில் தோன்றி கருணை பொழிகின்றது. அவள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள். அது கந்தசாமியின் குழந்தையின் பசிக்கு பாலாய் வழிகின்றது.

(யாவும் கற்பனை)

## பாட்டும் பாணமும்

பாணமொன்றை
எடுத்தேன்—அதை
வான வீதியிலே
விடுத்தேன்
பாணம் விரைந்தது
போல்—எந்தன்
பார்வை விரைந்திலதால்
பாரில் விழுந்த அதை
—என்னால்
பார்க்க முடியவில்லை.

பாட்டு வொன்றை
தொடுத்தேன்—அதைக்
காற்றில் கலந்து
விட்டேன்,
பாட்டு பறப்பதுபோல் -
எவர்
பார்வை விரைந்தது
கொல்?
பாரில் விழுந்த
இடம்—எந்தன்
பார்வை அறியவில்லை.

ஆண்டு பல கடந்து — ஓர்
ஆல விருட்சத்திலே
பாணம் கிடந்தது
காண்—அதன்
பாங்கில் பழுது இல்லை.

மீண்டும் இருந்தது
காண் —நட்பு
மீட்டும் உள
மொன்றிலே [முழு]
பாட்டு மிகுந்தது
காண்—அதைப்
பார்த்து மனம்
தெளிந்தேன்!

—வர்ணம்

[ ஆங்கிலக் கவிஞன் 'லோங் ஃபெல்லோ' வின் கவிதையொன்றின் தமிழ் வடிவம்]




நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

டொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

# நீதி மன்றத்தில் ஜீ ஜீ. யின் சாகசங்கள்

கா. யோகநாதன்

தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், அரசியல் துறையில் செல்வாக்கு குறைந்து ஆட்சி மன்றம் செல்லமுடியாமல், தேர்தலிலே தோல்வியடைந்த போது, அவரை நீதிமன்றத் துறை முன்னுக்கு கொண்டு வந்து, அவரின் புகழை உச்சக் கட்டத்தில் வைத்து, உலகம் பாராட்டும் விதத்தில் பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்துள்ளன.

1931ம் ஆண்டு ஜி. ஜி. மன்னார் இடைத்தேர்தலில் முதல் தடவையாக திரு. ஆனந்தருடன் போட்டியிட்டு, தோல்வியடைந்தபோது வடக்கில் அசைஸ் நீதிமன்றத்தில் 19 கொலை வழக்குகளில் ஆஜராகி வெற்றிப்பவனி வந்தார். இதன்மூலம் அவர் புகழ் பரவத் தொடங்கியது.

சேனநாயக்கா அரசாங்கத்தில் கைத்தொழில் மந்திரியாகவிருந்து, பின்னர் சார்.ஜோன் கொத்தலாவலையின் மந்திரி சபையிலும், மந்திரியாக இருந்து 1954ம் ஆண்டு ஜி.ஜி. மந்திரிப்பதவியை விட்டு விலகும் நிலை ஏற்பட்டது. அச்சமயத்தில்தான் ரஞ்சனி காப்ஸ் கொலைவழக்கில் ஆஜராகி, உலகப் புகழ்பெற்றார். ஜி.ஜி. தொடர்ந்து மந்திரியாக இருந்திருந்தால்,இந்த வழக்கில் ஏற்பட்டிருக்க முடியாமலிருந்திருக்கும். அரசியல் துறையில் தோல்விகளை அவர் தழுவிக் கொண்டபோதெல்லாம், நீதி மன்றம் அவரைகைவிடவில்லை.

1960ம் ஆண்டு தேர்தலில் யாழ்ப்பாண தொகுதியில் ஜீ. ஜி. தோல்வியடைந்தார் ஆனல் 1962ம் ஆண்டு நடந்த புரட்சி சதி வழக்கில் ஆஜராகி உலகப்புகழ்பெற்றார்.

1970ம் ஆண்டு யாழ்ப்பாண தேர்தலில் ஜி.ஜி. தோல்வியடைந்தார். ஆனல் 1976ல் ட்ரயல்அட்பார் வழக்கிலும், தி.மு.க.தலைவர் கருணாநிதி வழக்கிலும் ஆஜராகி உலகப் புகழ் பெற்றார். கடந்த அரை நூற்றாண்டாக ஜி. ஜி. யின் பெயர் பிரகாசித்துக்கொண்டு தான் இருந்தது.

## பொங்கல் கொலைவழக்கு

1940ம் ஆண்டில் யாழ்ப்பாணம் அசைஸ் நீதிமன்றத்தில் ஒரு கொலை வழக்கு நடந்தது. இக் கொலை தைப்பொங்கலுக்கு முதல்தினமிரவு நடந்தது. ஒரே ஒரு சாட்சிதான். அவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது இரண்டு வெடிச்சத்தம் கேட்டது சாப்பிட்ட குறையுடன் வெளியில் வந்து வேலியால் எட்டிப் பார்த்தபோது எதிரி ஒழுங்கையால் துவக்குடன் போய்க் கொண்டிருந்தார். ஒழுங்கையில் இரத்தவெள்ளத்துடன் கொலையுண்டவர் கிடந்தார். ஆனல், சாட்சி சுட்டதை காணவில்லை. எதிரிக்காக ஜி.ஜி.வாதாடினர். பொங்கலுக்கு முதல் தினம், அக்கம் பக்கம் வீடுகளில், சீனவெடி கொழுத்துவது வழக்கம் என்றும் தான் வீட்டிலிருந்தபோது துவக்குவெடிச்சத்தத்தையா, சீனவெடிச்சத்தத்தையா கேட்டதென்பதை கூறமுடியாமலிருப்பதாகவும், எதிரி சுட்டதை காணவில்லையென்றும், குறுக்குவிசாரணையில் சாட்சி கூறினர். விசாரணை நடுவில் எதிரி விடுதலையானர்.

## ரஞ்சனி காப்ஸ் வழக்கு

யூ. என். பி. அரசாங்கத்தில் 5 வருடங்கள் மந்திரியாகவிருந்தபின் ராஜினமா செய்த ஜி. ஜி. முதல் வழக்காக, கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய ரஞ்சனி காப்ஸ் கொலைவழக்கில் ஆஜரானர். அப்பொழுது கொழும்பில் இரண்டு டாக்ஸி கம்பெனிகளுக்குள் பலத்த போட்டியிருந்துவந்தது. ஜெயசிங்கா என்பவன் நாட்டாண்மைக் காரன்,இவருக்கு எதிரான டாக்ஸிகாரர்கள், இவரை தெருவிளையில் வைத்து வெட்டிக் கொன்றதாக வழக்கு.

நீதியரசர் சின்னத்தம்பி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது. அரச தரப்பில் ஸ்கொட்லண்யார்ட்டிலிருந்து கைவிரல் அடையாள நிபுணர் வரவழைக்கப்பட்டார்.அவரை ஜி.ஜி. 3 தினங்கள் குறுக்கு விசாரணை செய்தார்.அந்த குறுக்கு விசாரணையின்போது, விரல் அடையாளத்தில் ஒரு புதியஉண்மையை ஜி. ஜி. வெளியிட்டு, அதனை அந்த நிபுணர் ஏற்றுக்கொண்டார். உலகில் எந்தச் சட்ட நிபுணரும் இந்தப் புதிய உண்மையை அறிமுகப்படுத்தவில்லை.இவ்வழக்கில் ஜி. ஜி. வெற்றிவாகை சூடினர்.

நிபுணர் லண்டன் திரும்பியதும்,ஜி.ஜி.கண்டுபிடித்த புதிய உண்மையை அறிவித்தார். அகில உலகத்திலுமுள்ள, பொலிஸ் ஸ்தாபனங்களுக்கு ஜி.ஜி.யின் புதிய கண்டுபிடிப்பு பற்றி சுற்றுநிருபம் ஒன்று அனுப்பப்பட்டது.அந்த சுற்று நிருபத்தின் முற்பகுதியில் இலங்கையில் நடந்த கொலை வழக்கில் எதிரிசார்பில் ஆஜரான ஜி.ஜி.பொன்னம்பலம், விரல் அடையாளத்தில் புதிய உண்மை ஒன்றை வெளிப்படுத்தியிருக்கிறர் என்று எழுதப்பட்டிருந்தது. ஜி.ஜீ.யின் புகல் உலகெங்கும் கொடிகட்டிப் பறந்தது.

## குலரத்ன வழக்கு

காலி குலரத்தின வழக்கு பிரபலமானது. டாக்டர் குலரத்தினவும்,அவரது தாயாரும், திருமதி குலரத்தினவுக்கு நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு. 'ஆர்சாணிக்' நஞ்சு கொடுத்து கொஞ்சமாக கொஞ்சமாக உடலில் நச்சுத் தன்மையைப் புகுத்தச்செய்து இக்கொலை நடந்ததாக அரச தரப்பில் கூறப்பட்டது. டாக்டருக்காக ஜி.ஜி. வாதாடினர்.

பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னண்டோ முன்னிலையில் ஒரு மாதம் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் பின் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் சார்பில் அப்பீல் செய்யப்பட்டது. அப்பீல் விசாரணை மூன்று நீதியரசர்கள்முன்னிலையில் ஆரம்பமானது. அப்பீல் விசாரணைக்கு ஜி. ஜி. செல்லவில்லை. மூன்று நீதியரசர்களும் அசைஸ் நீதிமன்றத்தில் ஜி. ஜி. நடத்திய வாதங்களை திருப்பிப் படித்தபின் எதிரிகளை விடுதலை செய்தனர்.

நீதிமன்றத்திலிருந்து டாக்டர் குலரத்தன நேராக ஜி. ஜி. யின் வீட்டிற்குச் சென்று ஜி. ஜி.யை கும்பிட்டார். நன்றி தெரிவித்தார்.அதன் பின்னரே பம்பலப் பிட்டி பிள்ளையார் கோவிலுக்குச்சென்று வழிபட்டார்.

## ஜூரிக்காக வாதாடினர்

வழக்கத்தில் எதிரிகளுக்காக வாதாடும் ஜி. ஜி. இனுவில் கொலை வழக்கில் ஜூரிசபை உறுப்பினர் ஒருவருக்காக இலவசமாக வாதாடினர். அவ் வழக்கில் நீதிமன்றத்தில் ஜூரிக்கு எதிராகப்பொய்க்குற்றச்சாட்டுச் சுமத்திய ஒரு

வரை ஜீ. ஜீ. தம...
...ன் திறமையாலே ...
நிரூபித்துவிட்டார்.
இனுவில் கொலை...
பகுதி முதலாவது அ...
மன்றத்தில் நீதிய...
டபிள்யூ. தம்பைய...
யில் விசாரணைக்கு வ...
ஒரு கடுமையான வ...
பக்கத்தில் ஜி. ஜி. ...
இவருக்கு அனுசர...
டத்தரணி எம். ...
...ங்கம் ஆஜரானர்...
விசாரணை ஆர...
உறவினர் ஒருவர் ...
உறுப்பினர் ஒருவ...
வீட்டில் முதல் ந...
சந்தித்ததாக, நீ...
முறைப்பாடு ஒன்று...
கப்பட்டது. இத...
சர் விசாரணையை ...
கப்போவதாகக் கூ...
திட்டமிட்ட செயல்...
கூறினர். ஜி. ஜி. ...
அந்தப் புகார் ...
கண்டில் ஏற்றினர்...
விசாரணை செய்தா...
ஜூரியின் வீடு எ...
கிறதென்பதை ...
கொண்டதும் ...
பொலிஸ் அதிபர் ...
இடத்திற்குப் ...
அனுப்பி அது ...
என்பதை அறிந்து...
மாறு நீதியரசரிட...
கேட்டார். பொலி...
பிட்ட வீட்டிற்குச்...
அது ஒரு பாழ...
அங்கு சில சட்ட...
யேற்றக்காரர் ...
விட்டு பொலிசா...
தும் பின் பக்கத்த...
மெடுத்தனர். வீ...
பாடங்கள். ...
பொலிசார் ...
வந்து இத்தகவலை ...
தில் தெரிவித்தன...
சர், பொய் மு...
செய்து நீதிமன்ற...
மதித்ததற்கு அவர்...
நடவடிக்கை ...
பொலிசாருக்குஉத்...
ஜி. ஜி., ஜூரிக்...
மாக சுமார் 2 ...
குறுக்கு விசாரணை ...
பொய்க் குற்றச்ச...
பதை நிரூபித்தா...
டத்தில் நீதியர...
யைப் பார்த்து நீர்...
களா அல்லது ஜ...
வாதாட வந்தீ...
கேட்ட போது ஜி...
மைக்காக; நீதிக்க...
கிறேன்' என்றார். ...
காரணமில்லாமல் ...
போடுவது இந்த ...
தில் பழக்கமாகி...
ஜி. ஜி. கூறினர். ...
ஒத்திப்போடப்பட...
அடுத்த விசார...
யரசர் திரு. பி...
ராசா முன்னிலை...
யில் கொலை வழக்...
ரணைக்கு எடுக்கப்...
சமயம் ஜி. ஜி. ...
சென்றிருந்தார், ...
ஆலோசனைகளுட...
ஜூனியர் சட்டத்...
எஸ். சுந்தரலிங்க...
நடத்தினர். எதி...
கடுழிய சிறைத்...
விதிக்கப்பட்ட...
தீர்ப்பை எதிர்...
செய்தார். அப்பீ...
யில் எதிரி விடுதலை...

நாடகம்

# சிட்டுக்குருவியும் பருந்தும்

சொக்கன்

## காட்சி-1

( தொடர்ச்சி )

சுப்பு: என்ன, அம்மாவுக்கு வாய் அடைச்சுப்போட்டுது? பேசுங்கோவன்.

புவன: எங்களை ஒரு சொல் கேட்காமல் ஆரைக் கொண்டோ கடிதம் எழுதிச் சிங்களே? எப்பிடி?

இராசம்: (மௌனம்)

இராசா: அம்மா ஏன் பேசாமல் இருக்கிறியள்? தேத்தண்ணியைக் குடிச்சிட்டு உசாராய்ப் பேசுங்கோ.

இரா: (விம்மியபடி) இந்தச் செய்தியைக் கேட்டதுமே என்ரை உசார் எல்லாம் பறந்து போயிட்டுது...முருகா. (பெருமூச்சுவிடுகிறள்)

சுப்பு: அம்மா, தெய்வம் போலை இருக்கிற உன்ரை மனதை நோக வைச்சானே? இவன் நல்லாய் இருக்க மாட்டான். அம்மா. நல்லாய் இருக்க மாட்டான்.

இராசம்: (வேதனைச் சீற்றத்துடன்) டேய், பாவி. நல்ல நாளும் வெள்ளிக்கிழமையுமாய் அவனுக்குச் சாபம் குடுக்காதையடா... அவன் எங்கையாவது நல்லாயிருக்கட்டும் விட்டுத்தள்ளு.

சுப்பு: விடுத்தள்ளுறதோ? அம்மா உனக்கு எப்பவும் இந்த அஞ்சகம்தானே? ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் மற்றக் கண்ணுக்கு வெண்ணெயும் போடுற ஆள்தானே நீ. உனக்கு இந்தத் தண்டனை கட்டாயம் வேணும்.

இராசா: சின்னண்ணை.பெரியண்ணையை என்னவெண்டாலும் சொல்லுங்கோ. அம்மாவை ஒண்டும் சொல்லாதையுங்கோ. அதை எங்களாலை தாங்கமுடியாது.

இராசம்: இல்லையடி ராசாத்தி.அவன்என்னைஎப்படியும்பேசட்டும். ஆனல் என்ரை காது கேட்கப் பெரியதம்பியை ஒன்றுஞ்சொல்லவேண்டாம். (விம்மி வெடித்தபடி) நேராத கோயிலெல்லாம் நேர்ந்து இருக்காத விரதம் எல்லாம் இருந்து,நல்லூர்க்கந்தன்ரை அருளாலை நான் பெத்த தவக்குஞ்சை எனக்கு முன்னாலை ஒருத்தரும் ஏசக்கூடாது. நான் அதைச் சகிக்கமாட்டேன். ஓ......

சுப்பு: (கண்கலங்க குரல்தளதளக்க) அம்மா. என்ரை வாழ்க்கையிலை முதல் முறையாய்உங்களை நீ எண்டு அழைச்சிட்டன். என்னை மன்னியுங்கோ... நான் கோபத்திலை என்னை மறந்திட்டன்.

புவ: அம்மா, உங்கட மனம் நோகப் பேசீட்டம். எங்களை மன்னியுங்கோ.

இராச: வேண்டாம் பிள்ளையள். கண்டு இடிச்சுப் பசுவுக்கு ஒண்டும் ஆகாது. சரி சரி உள்ளுக்குப்போய் வேலையைப் பாருங்கோ.

(இராசாத்தி தனது இடத்தில் இருந்து எழுந்து ஓடிவந்து ''அம்மா, முதலிலை தேத்தண்ணியைக் குடியுங்கோ. நீங்கள் தேத்தண்ணி குடிக்காட்டில் நாங்கள் இண்டைக்குச் சாப்பிடப்போறதில்லை'' என்கிறள்)

இராசம்: முதலிலை நீ போய் உன்ரை இடத்திலை இரு. 'அங்கையும் இங்கையும் நீ ஓடியாடித் திரியக்கூடாது. போ.

இராசா: நான் போறதெண்டால் நீங்கள் தேத்தண்ணியைக் குடிக்கவேணும். அதுவும் ஆறிப்போச்சு.

இரா: நான் குடிக்கிறன். நீ போ ராசாத்தி. (ராசாத்தி போகிறள். இராசம்மா பேணியைத் தூக்கி அண்ணாந்து குடிக்கும் பொழுது அவள் கண்களிலிருந்து நீர் வழிகிறது)

சுப்பு: (அவளருகிலே சென்று கண்ணீரைத்துடைக்கிறள்) அம்மா நீங்கள் அழக்கூடாது அதை என்னல் சகிக்க முடியாதம்மா. இந்தக் கண்ணீர், கண்ணீராக எனக்குத் தெரியவில்லை. நெருப்பாய் என்ரை நெஞ்சைச்சுடுது.

இரா: நான் எப்படி அழாமலிருக்கிறது. சுப்பு எங்கை... பிள்ளையள போயிட்டுதுகளோ.

சுப்பு: அக்கா அடுப்படிக்குப் போயிட்டா. இராசாத்தி. கொட்டிலுக்குப் போயிட்டாள். நீங்கள் சொல்லுங்கோ அம்மா.

இரா; (மெதுவாக விட்டு விட்டுச்சொல்கிறள்)கொப்பர் சாகேக்கை உன்ரை அண்ணனுக்குப் பதினறு வயசு. கொக்காவுக்காவுக்குப் பதினைந்து வயசு. உனக்குப் பன்னிரண்டு வயசு. இராசாத்தி கைக்குழந்தை. அந்த நாளையிலிருந்து உங்களை நயம் நட்டம் தெரியாமல் வளர்க்க நான் பட்ட பாடு அந்த முருகனுக்குத்தான் தெரியும். பத்துப் பரப்பு வீடு வளவும் ஐயாயிரங் கண்டுப் போயிலைத் தோட்டமும்தான் என்ரை சொத்து. அதை வைச்சுக் கொண்டு ஆட்டை மாட்டை வளர்த்து, சேங்காய் விற்று, புல்லுப் பிடுங்கிற கூலிக்காரியாய் பாடுபட்டு, உங்களை வளர்த்தனன். ஒரு ஆண் துணையில்லை. உற்றார் உறவினரின்ரை உதவியில்லை. ஆனல் உங்களை ஒரு தனிட்டைக் கை நீட்டாமல் வளர்த்துப் போட்டன். என்னலை இயண்ட கல்வியுந் தந்தன்.

சுப்: இது எல்லாம் எனக் தெரியும் அம்மா. உங்களின் இரத்தத்திலை, தசையிலை, எலும்பிலைதான் உருவான நாங்கள். இது எனக்குத் தெரியும்.

இரா: உஸ்...சத்தம் போட்டுப் பேசாதை. பிள்ளையளுக்குக் கேட்கப்போகுது. தம்பி, நானும் கிழவியாய்ப் போயிட்டன். காடு வாவா எண்ணுது; வீடு போ போ என்குது. இந்த நிலையிலை இந்த இரண்டு குமரையும் ஆற்றை ஆதாவிலே நான் விட்டுப்போறது? ஒருதன் ஏமாற்றிப்போட்டான். நீ இருக்கிறய். ஆனல்... எனக்கு என்ன சொல்லிறதெண்டே தெரியேல்லை.

சுப்: அம்மா எனக்கு எல்லாம் விளங்குது. இண்டுவரையிலை நான் குழந்தைபோல இருந்தது போதும். இனி உத்தியோகம் எண்ட மாயமானைத் தேடி நான் அலையப் போறதில்லை.

இரா: உத்தியோகம் புருஷலச்சணமல்லே? கோழிமேய்ச்சாலும் கோறணமேந்தில மேய்க்கவேணும்.தெரிஞ்சுதே?

சுப்: அம்மா, அந்தக் காலம் மலையேறிப்போச்சுது. உத்தியோகம் என்பது வெறும் கனவு, அது எனக்கு வேண்டாம். இண்டையிலையிருந்து நான் எங்கடை தோட்டத்திலை கடுமையாய் உழைக்கப் போறன். வேறை காணியளைக் குத்தகைக்கெடுத்துச் செய்யப் போறன். இருண்ட இந்த வீட்டிலை விளக்கேத்தி வைக்க நான் எந்த வேலையையும் செய்யத் தயாராயிருக்கப் போறேன். அக்காவையும் இராசாத்தியையும் பொட்டோடை, பூவோடை, மாங்கலியத்தோடை பார்க்கிறது தான், இனி என்ரை கனவு, நனவு எல்லாம். நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ அம்மா, சந்தோஷமாய் இருங்கோ.

இரா: இது என்ன மானக்கேடு. உன்ரை அண்ணை எஞ்சினியர் நீயோ பி. ஏ. பாஸ் பண்ணினவன். தோட்டமே கொத்தப்போறய்? அவனுக்குங்கூட இது மதிப்பில்லை.

சுப்பு: (கோபத்துடன்) அம்மா..அண்ணையின்ரைகதையைத் தயவு செய்து எடுக்காதையுங்கோ... என்னை என்ரை வழியிலை விடுங்கே. ஒரு கமக்காரனின் பெண்சாதி பேசிறது போலை நீங்கள் பெசேல்லை.

இரா: கோபிக்காதையடா தம்பி...வானத்தைப்பார்த்துப் பார்த்து ஏமாந்து, நிலத்தைக் கொத்திக்கொத்திவருந்திவெயிலிலையும் கானலிலையும் அடிபட்ட அனுபவந்தான் என்னைஇப்பிடிப்பேசவைத்தது.வயசுபோன காலத்திலை பென்சன்...வாழுற காலத்திலே கை நிறையப் பணம் சொகுசான வாழ்க்கை உம்...உன் விதிஅப்படி இல்லை எண்டால் நான் சொல்ல என்ன இருக்குது? உன் விருப்பம் போலச்செய்.

சுப்: சரி அம்மா. நான் எங்கடை தோட்டக்குத்தகைக் காறனைக் காணவேணும். இந்த மாதம் பொயிலையை வெட்டினதும தோட்டத்தைவிட்டிடச் சொல்லிப் போட்டு வாறன். அந்த டாக்குத்தர் கனகராசாவின் தோட்டத்தையும் எனக்குக் குத்தகைக்குத் தரச்சொல்லிக் கேட்கப்போறன். போயிட்டு வரட்டே?

இரா: உம்... போயிட்டுவா. (சயிக்கிளை எடுக்கும் சப்தம். உள்ளிருந்து புவனேஸ்வரி தம்பி சாப்பிட்டிட்டுப் போ. தோசை கிடந்து காயுது என்கிறள்.

எனக்கு ஒண்டும் ...
மத்தியானம் வந்...
சாப்பிடுறன். (...
சொல்லி விட்டுச்...
உருட்டிச் செல்கி...

இரா: என்ன? ...
வெள்ளிக்கிழமை ...

இரா: ஓமோ...
இனி விரதந்தான்...
(திரை...)

## திருத்தம்

'சிட்டுக் குருவியும் பருந்தும்' நாடக முகவுரையில் திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு- கனகம் என்றிருப்பது தவறு. மாரிமுத்து என்றிருக்க வேண்டும்.

பயனுள்ள ...
நீங்கள் இற...
வுடனேயே ...
மறந்துபோகா...
வேண்டுமானல்...
தற்குப் பயனு...
களை எழுதுங்க...
யென்றல் எழு...
னுள்ள கார்...
செய்யுங்கள்.
பெஞ்சமின்பிர...

ஜீ. தமது வாதத்
மையாலே குற்றத்தை
விட்டார்.
வில் கொலைவழக்குவட
தலாவது அசைவு நீதி
தில் நீதியரசர் எச்.
தம்பையா முன்னிலை
ரணைக்கு வந்தது. அ
மையான வழக்கு. எதிரி
ல் ஜி. ஜி. ஆஜரானார்.
அனுசரணையாக சட்
ி எம். எஸ். சுந்தர
ஆஜரானார்.
ணை ஆரம்பமானது.
ர் ஒருவர் ஜூரிசபை
னர் ஒருவரை அவரின்
முதல் நாள் இரவு
தாக, நீதியரசருக்கு
பாடு ஒன்று தெரிவிக்
து. இதனால் நீதியர
ரணையை ஒத்திவைக்
தாகக் கூறினார். இது
ட்டசெயல் என ஜி. ஜி.
ஜி. ஜி. விடவில்லை.
புகார் கூறியவரை
ஏற்றினார். குறுக்கு
ன செய்தார். அந்த
வீடு எங்கு இருக்
பதை அறிந்து
தும் உடனே
அதிபர் மூலம் அந்த
ற்குப் பொலிசாரை
அது உண்மையா
த அறிந்துவரச்செய்யு
தியரசரிடம் ஜி. ஜி.
ர். பொலிசார் குறிப்
ீட்டிற்குச்சென்றனர்.
பாழடைந்த வீடு.
ல சட்டவிரோத குடி
காரர் ஒழித்திருந்த
பொலிசாரைக் கண்ட
பக்கத்தால் ஓட்ட
னர். வீட்டில் தள
ல். எதுவுமில்லை.
ார் உடனடியாக
த்தகவலை நீதிமன்றத்
ிவித்தனர். நீதியர
ாய் முறைப்பாடு
நீதிமன்றத்தை அவ
ற்கு அவர் மீது சட்ட
க்கை எடுக்குமாறு
ாருக்குஉத்தரவிட்டார்
., ஜூரிக்காக இலவச
ார் 2 மணி நேரம்
விசாரணை செய்து அது
குற்றச்சாட்டு என
ுவித்தார், ஒரு கட்
நீதியரசர், ஜி. ஜி.
ார்த்து நீர் எதிரிக்காக
அல்லது ஜூரிக்காகவா
வந்தீர்? என்று
போது ஜி. ஜி. 'உண்
க; நீதிக்காக வாதாடு
என்றார். வழக்குகளை
இல்லாமல் ஒத்திப்
து இந்த நீதிமன்றத்
ழக்கமாகிவிட்டதென
கூறினார். இவ்வழக்கு
பாடப்பட்டது.
த விசாரணையில் நீதி
திரு. பி. ஸ்ரீஸ்கந்த
முன்னிலையில் இனு
ாலே வழக்கு விசா
எடுக்கப்பட்டது. அச்
ஜி. ஜி. வெளிநாடு
ருந்தார், ஜி. ஜி.யின்
ணைகளுடன் அவரது
ர் சட்டத்தரணி எம்.
ந்தரலிங்கம் வழக்கை
ார். எதிரிக்கு 5 வருட
சிறைத்தண்டனை
கப்பட்டது. எதிரி
எதிர்த்து அப்பீல்
ர். அப்பீல் விசாரணை
ி விடுதலையானார்.

(வளரும்)

...உள்ள எழுத்து
கள் இறந்துபோன
னயே மக்கள்
துபோகாமலிருக்க
டுமானால் படிப்ப
ப் பயனுள்ளவை
எழுதுங்கள்—இல்லை
றால் எழுதப் பய
ா காரியங்களைச்
புங்கள்.
சமின்பிராங்கிளின்

ஒண்டும் வேண்டாம்.
னம் வந்து குளிச்சிட்டு
றன். (என்று சுப்பு
விட்டுச் சைக்கிளை
ச் செல்கிறான்)
என்ன? அண்ணையும்
க்கிழமை விரதமோ?
ஓமோம். அவனும்

## கலையுலகத் தொடர்புகள் — 15

# எம். ஜி. ஆர். ரசிகர்கள் சாப்பாடு படுக்கையுடன் வந்து காத்திருந்தார்கள் !

அடுத்தநாள் எம். ஜி. ஆருக்கு நிறையவேலையிருந்தது. பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி, பட்டமளிப்புவிழா— இப்படி பலவித ஏற்பாடுகள். இதற்கிடையில் அப்பொழுது பிரதமாக இருந்த திரு. டட்லி சேனநாயக்காவையும் சந்திப்பதாக இருந்தது. அன்று காலை இதற்காக திரு. செல்லமுத்து தனக்குள்ள செல்வாக்கை உபயோகித்து திரு. டட்லிசேனநாயக்காவுடன் பேசி இவர்கள் சந்திக்க ஒழுங்குசெய்துவிட்டு எனக்கு டெலிபோன் செய்தார். எம்.ஜி.ஆரை தயாராக இருக்கச்சொல்லுங்கள் நான் இதோ வந்து பிரதமர் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன் என்றார்.

இச் செய்தியை எம்.ஜி.ஆர் கேட்டதுதான் தாமதம் உடனே புறப்பட்டு விட்டார். ஆனால் சரோஜாதேவி பெண்களுக்கே உரித்தான முறையில் அலங்கரிக்க ஆரம்பித்தவர் முடிக்கவில்லை. இதற்கிடையில் அங்கு வந்துவிட்ட திரு. செல்லமுத்து துரிதப்படுத்த ஆரம்பித்துவிட்டார். எம்.ஜி.ஆர். இரண்டுதடவை சரோஜாதேவியை "புறப்படும்மா" என்று கூறிப்பார்த்தார். அவர்

எம். ஜி. ஆர். வருகையைப் பயன்படுத்தி பிழைத்துக்கொண்டவர்கள் பல பேர்.

புறப்படுவதாகக் காணவில்லை. "சரி அந்த அம்மா பின்னலே வரட்டும் நாங்கள் முன்னடி போவோம்" என்று கூறி புறப்பட்டு விட்டார். நான் ஹோட்டலிலேயே தங்கிவிட்டேன். அவர் சென்று ஒரு அரைமணி நேரத்திற்குப் பின் தான் சரோஜாதேவிபுறப்பட்டுவந்து 'போவோமா நீங்க வரலையா' என்றார். "நான் வரவில்லை உங்களைத் தகுந்த பாதுகாப்போடு அனுப்பிவைக்கிறேன்" என்று அழைத்துச்சென்று காரில் ஏற்றி அனுப்பிவைத்தேன். எம்.ஜி.ஆர், சரோஜாதேவி தாங்கள் பிரதமருக்கென கொண்டுவந்திருந்த பரிசில்களையும் கொடுத்து அவரோடு அளவளாவிவிட்டு ஹோட்டலுக்குத் திரும்பியபொழுது, அவர்களுக்கான சாப்பாடும் வந்துவிட்டது. சாப்பாடு முடிந்ததும், எப்படியோ ஹோட்டலுக்குள் புகுந்துவிட்ட ரசிகர்கள் சிலருடன் உரையாடல்.



### படுக்கையுடன் வந்த ரசிகர்கள்

இச் சமயத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்களைப்பற்றி சில குறிப்பிடவேண்டும். எம்.ஜி.ஆர். இருந்த ஹோட்டலுக்கு காலிவீதிப்பக்கத்தில் சில பெரிய கட்டிடங்கள் உள்ளன. இந்தக் கட்டிடங்களில் வெயில், மழைக்கு ஒதுங்க வசதியான

**எஸ். பி. மயில்வாகனன்**

இடமுண்டு. இதில் சில ரசிகர்கள் இரவு பகலாக தங்கிவிட்டார்கள், சிலர் சாப்பாடு, படுக்கை கொண்டுவந்திருந்தார்கள். காலிரோட்டில் இந்தப்பகுதியில் போக்குவரத்து தடைபட்டு இருந்தது, இதனால் நிரந்தரமாக பொலிஸ் நிறுத்தப்பட்டிருந்தார்கள். "எத்தனை தரம் பார்த்தாலும் அலுக்காது" என்றார் ஒரு ரசிகர். ஒரு ரசிகை எம்.ஜி.ஆரை ஒரு தடவை தொட்டால் போதும் என்றார். இப்படி பல ரசமான ரசிகர்கள் இரவு பகலாகக்காத்திருந்தார்கள் அந்த ஹோட்டல்முன். அன்று பிற்பகல் பத்திரிகையாளர் மகாநாடு, இதுவும் அவர் தங்கியிருந்த ஹோட்டலிலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### இத்தனை பத்திரிகையாளரா!

அந்த ஹோட்டலிலுள்ள மிகப் பிரமாண்டமான மண்டபம். இதில் எங்கிருந்து இவ்வளவு பத்திரிகை நிருபர்கள் கூடினார்கள் என்பது எல்லோருக்கும் ஆச்சரியம். இலங்கையில் எத்தனை பத்திரிகைகள் உள்ளன. ஒவ்வொரு பத்திரிகைக்கும் இரண்டு நிருபர் விகிதம் பார்த்தாலும் நூற்றுக்கு மேல் வராது. ஆனால் மண்டபத்தில் இருந்தவர்களோ ஆயிரத்திற்குமேலாக இருக்கும். ஒருவர் என்னிடம்வந்து தனக்கும் தனது குமர்ப்பிள்ளைகள் நால்வருக்கும் எப்படியும் ஆசனம் பிடித்துத்தரும்படி மன்றாடினார். "நீங்கள் எந்தப் பத்திரிகையைச் சார்ந்தவர்" என்று கேட்டேன். அது அவருக்கு பிடிக்கவில்லை. "நான் ஆசனம் பிடித்துக் கொள்கிறேன்" என்று போய்விட்டார். எனக்கும் தொல்லை குறைந்தது. பத்திரிகையாளரைச் சந்திப்பதற்குமுன் எம்.ஜி.ஆர். தனது வழமையான வேட்டியோடு ஒரு படத்தில் நடிக்கும் பொழுது போட்டு நடித்த ஒரு இறுக்கமான சட்டையையும் போட்டுக் கொண்டு பத்திரிகையாளர்கள் உள்ள இடத்தை நோக்கிப்போக ஆரம்பித்துவிட்டார். "என்ன புறப்பட்டாச்சா" என்றேன். 'ஆமா, வாங்க போவோம்" என்றார். 'மண்டபத்தில் எத்தனை பேர் கூடியிருக்கிறார்கள் தெரியுமா" என்றேன்.

"என்ன ஒரு ஐம்பது நாலு பேர் இருப்பார்களா" என்றார். அப்பொழுதுதான் நான் நினைத்தேன். இவர் வந்திருக்கும் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை தெரியாமல் புறப்பட்டுவிட்டார். அதனால் தான் தன் உடையைக்கூட

(9-ம் பக்கம் பார்க்க)

## பாம்புக்கடிக்கு

# விஷ முறிவு மருந்து!

பாம்பு கடித்தது என்றால் மனித வாழ்வுக்கு ஒருமுடிவு வந்துவிட்டதாகவே கருதப்படுகிறது. பாம்பு என்றாலே பயம். அதிலும் பாம்பு கடித்துவிட்டது என்றால் பலர் அருகேகூட நெருங்க பயப்படுகிறார்கள். மருத்துவமுறை ஆராய்ச்சியில் இப்பொழுது பாம்புக்கடிக்கு வைத்தியமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மருந்தும் உண்டு.

### இரண்டு லட்சம்

உலகில் இரண்டு நாடுகளைத் தவிர மற்றப்பகுதிகளில்பாம்பு நடமாட்டம் இருக்கிறது. நியூசிலாந்து, அயர்லாந்து ஆகிய

**டாக்டர் ஏ. கருப்பண்ணபிள்ளை**
(அரச மருத்துவமனை-இராயப்பேட்டை - சென்னை)

இரு நாடுகளில் பாம்பு கிடையாது. மற்ற நாடுகளில் மொத்தம் 2500 வகை. பாம்புகள் உள்ளன. இவற்றில் 216 வகை பாம்புகளுக்குத்தான் விஷம் உண்டு. இந்தியாவில் 4 வகையான பாம்புகள் விஷம் உள்ளது. மற்ற நாற்பத்தெட்டு வகைகளும் விஷப்பாம்புவகையில் சேர்க்கப்படவில்லை. ஆண்டு தோறும் 2 லட்சம் பேர்களுக்குபாம்புக்கடி ஏற்படுகிறது. சுமார் 15 ஆயிரம் பேர் இறந்து போகிறார்கள்.

### சில உண்மைகள்

சிலவகையான பாம்பு கடித்தால் தொழுநோய்வருவதாகச் சிலர் கூறுகிறார்கள். இது பொய். அதேபோல் வயதான பாம்புகளிலிருந்து மாணிக்கம் கிடைப்பது என்று கூறுவதும் சரியல்ல. பாம்புகள் பழிவாங்கும் சுபாவமுள்ளது என்பதும் தவறு. எவ்விதமான உணவும் உட்கொள்ளாமல் நீரை மட்டும் அருந்தி ஒரு ஆண்டுவரை பாம்புகள் உயிர் வாழும். பொதுவாக பாம்புகள் 20 ஆண்டுதான் உயிருடன் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### விஷப்பாம்புகள்

நல்லபாம்பு, கண்ணாடி விரியன், குழி விரியன், கட்டுவிரியன், சுருட்டைப் பாம்பு ஆகியவைதான் விஷமுள்ளவை. இவற்றில் அதிகமான கொடுமையான பாம்பு கட்டுவிரியன்தான். மண்பாம்பு சாரை, தண்ணீர்பாம்பு, மலைப் பாம்பு, கொம்பேறிமூக்கன், பச்சைப்பாம்பு ஆகியவற்றை விஷமில்லாத பாம்புகள் என்று கூறமுடியும்.

### கடித்தால்

கண்ணாடி விரியன் கடித்தால் எரிச்சலுடன் கூடிய தொடர்வலியும் விக்கமும் ஏற்படும். கடிவாயின் நிறம்மாறி கொப்புளம்தோன்றும். தலை சுற்றி வாந்தி எடுப்பார்கள். எச்சில், சிறுநீர் ஆகியவற்றில் இரத்தம் கலந்துவரும். கண் பார்வையும் சுவாசமும் பாதிக்கப்படும்.

கொடியவிஷமுள்ள கட்டு விரியன் கடியைப் பற்றி தெரிந்து கொள்ளுமுன் நல்ல பாம்புக்கடியைப்பற்றிதெரிந்து கொள்வது அவசியம். நல்ல பாம்பு கடித்த இடத்தில் வலி, விக்கம், கண் இமை பாதிப்பு, கால்கள் சோர்ந்து போகும், பேச்சுகுளறும், மயக்கம் ஏற்படும். இதன் விஷம்விரைவில் நரம்புகளில் பாய்ந்துவிடும். மூச்சுத்திணறல் ஏற்பட்டுஉயிர் போகும். கட்டுவிரியன் கடித்தால் நல்லபாம்பு கடித்தால்

[9ம் பக்கம் பார்க்க]

## ஞானத்தமிழ் — 23

# கலத்தலைக் காகம்

ஒரு மரக்கலம் நடுக்கடலிலே போய்க்கொண்டிருக்கிறது. அதன் உச்சியிலே ஒரு காகம். அந்த மரக்கலம் கரையில் நிற்கும் போதே அந்தக் காகம் அதன் மேல் வந்துதங்கியிருந்தது. மரக்கலம் அசைந்து மெல்ல கடலில் பிரயாணம் செய்தபோது காகத்திற்கு அது வேடிக்கையாக இருந்தது. சற்று நேரம் அப்படியே இருந்து பார்ப்போமே என்று அது நினைத்திருக்கலாம். மரக்கலம் கடலுள் கரையை விட்டு வெகு தூரத்திற்குச் சென்றுவிட்டது. காகத்திற்கு அப்போதுதான் மரக்கலத்தை விட்டு பறந்து வேறிடத்திற்குப் போவோம் என்ற எண்ணம் தோன்றியது. மரக்கலத்தைவிட்டு ஒரு பக்கம் பறந்து பார்த்தது எங்கும் பரந்த நீர்ப்பரப்பு. மறுபக்கம் பறந்தது. அங்கேயும் பரந்த நீர்ப்பரப்புத்தான். இவ்வாறு நாலு பக்கங்களிலும் பரந்த நீர்ப்பரப்பைக் கண்ட காகம், மரக்கலத்தின் உச்சிக்குத் திரும்பிவந்தது. எங்கு பார்த்தாலும் நீர் தனக்கு இப்போ நிலையான துணையாயுள்ளது மரக்கலம்தான் என்ற உண்மையைக் காகம் அறிந்து கொண்டது. கலத்தலைக்காகம் உதாரணமாகக் காட்டப்பெற்ற ஒரு கதையைப் பார்ப்போம்.

தேவர்கள் சூரபன்மனது துன்பம் தாங்காமல் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். இறைவன் தனது ஆறு நெற்றிக்கண்களில் நின்றும் 6 அக்கினிப் பொறிகளைத் தந்தார். அந்த அக்கினிப் பொறிகள் எங்கும் பரந்தன. இறைவன்முன்னே நின்றதேவர்கள் அக்கினிப் பொறிகளுக்கு அஞ்சி ஓடினார்கள். அக்கினி எங்கும் பரந்தமையால் ஓரிடத்திலும் அவர்களால் தங்க முடியவில்லை. திரும்பியும் இறைவனிடத்தே வந்தார்கள். அப்போதுதான் இறைவன் நம்மைக் காப்பார் என்ற புத்திவந்தது. அல்லது முன்பே ஓடாமல் நின்றிருக்கலாம் அல்லவா? வலையிலே அகப்பட்ட மானைப் போல எங்கும் அக்

**வ. குகசர்மா**

கினி சூழ்ந்ததே இந்தத் தெளிவுக்குக் காரணம். இந்த இடத்திலே கலத்தலைக்காகம் உதாரணமாக எடுத்தாளப்படுகிறது.

'வலைத்தலை மானென
வன்னி சூழ்ந்து ழித்
தலைத்தலை இரிந்துளோர்
தம் மின் மீள்குறு
நலத்தகு கண்ணுதல்
நாதற் சேர்ந்தனர்
கலத்தலை அகன்றிடாக்
காகம் போன்றுளார்'

உலகத்தில் எங்கு பிறந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் இறைவனுடைய சிந்தனை நம் மனதுள் இருக்கவேண்டும். அப்போதுதான் தீமை நீங்கும் நன்மை ஏற்படும். இறைவன் நன்மையே தருபவர். இறைவனை வணங்குபவர்கள் தீமையான செயல்களை நினைக்க மாட்டார்கள். எனவே அவர்களுக்கும் தீமை ஏற்படாது. எனவே 'நலத்தகு கண்ணுதல் நாதன்' என்று இச்செய்யுளில் கூறப்பட்டது.

பிறவி என்பது கரைகாண முடியாத கடல். அதில் பல துன்டம் உண்டென்பது யாவருக்கும் ஒப்பமுடிந்த உண்மை. அந்தக் கடலைத் தாண்டும் வள்ளம் போன்றது இறைவன் நாமம், அவனது திருவடி எங்கே சென்றால் யாவரும் சேர வேண்டிய இடம் அதுதான். இன்பம் அடையும் இடமும் அதுதான்.

'கை தொழுதுற்றவர்
தாமொழி பெற்றனர்
தாமே,

என்பது நாவுக்கரசர் தேவாரம்.

குலசேகராழ்வார் இந்தக் கருத்தை மிகத் தெளிவாகத் தமது பாடலில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

'வெண்கண் திண்களி
றடர்த்தாய் வித்துவக்
கோட்டம்மானே
எங்கு போயுய்யேன்
உன்னினை யடியே
யடையல்லால்
எங்கும் போய்க்
கரை காணா எறிகடல்
வாய் மீண்டேகும்
லங்கத்தின் கூம் பேறும்
மாப்பறவை போன்றேனே'

### புதிதாக எழுதுபவர்களுக்கு

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுங்கள். சுவையான கட்டுரைகளை சுருக்கமாக எழுதுங்கள். 'போர்' அடிக்கும் கட்டுரைகள் வேண்டாம். சிறுகதைகளும் 'சிறு' கதைகளாகவே இருக்கட்டும். திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலையும் சொந்த முகவரியிட்ட கடித உறையும் அனுப்புங்கள். ஆ—ர்.

## நல்லூர் செல்லப்பா சுவாமிகள் அருளிய

# முழுவதும் உண்மை!

அருள்மிகு செல்லப்பா சுவாமிகள் 62-ம் குருபூசை விழா எதிர்வரும் 22-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 12 மணிவரை நடைபெறும். நல்லூர் தேரடிக்குஅண்மையிலுள்ள சுவாமிகள் ஆச்சிரமத்தில் விசேஷ பூசைகளும் நற்சிந்தனைப் பாராயணமும், நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உருத்திரா அபிஷேகமும், சடையம்மா மடத்தில் மகேஸ்வரபூஜையும், தேரடியில் ஆராதனையும் இடம்பெறும். இவ்வைபவத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

நிகழும் செவ்வாய்க்கிழமை (22-3-77) அச்சுவினி நட்சத்திரம் பொருந்திய சுப தினம். இச்சுபதினமே சிவயோக சுவாமிகளுக்கும் குருமூர்த்தியாகஎழுந்தருளியிருந்த செல்லப்பா சுவாமிகளின் குருபூசைத் தினமாகும். குருபக்தி பெரும்பேறுகளைக் கொடுக்க வல்லது.

''குருபக்தியே பெரும்பேறு
கொண்டாடிக் கொண்
டாடி ஆறு''

என்பது சிவயோக சுவாமிகள் குருபக்தி என்னும் பகுதியில் பாடியருளிய பாடல்களுள் ஒன்று. பெரும் பேருகிய குருபக்திக்கு நாம் இப்போது ஆளாகியுள்ளோம். அதனுல் நாம் பெரும்பேறுகள்பெறலாம் என்பது திண்ணம்.

திருவருளே ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்பொருட்டுக் குருவடிவந்தாங்கி இந்நிலவுலகில் வருகின்றது. ஆன்மாக்களுக்கு உள்ள மலநோயை நீக்கவல்லது குருவின் திருவருளாகிய மருந்தாகும். அத்திருவருள் அருமருந்து; பெருமருந்து; பேசோணுத மருந்து; பெரும் பிணியாகிய பிறவிப் பிணியையே மாற்றும் மருந்து. இது மிகவும் நல்ல மருந்து. நல்ல மருந்தை உண்பதற்கு நோயாளி விரும்புவான், நல்ல திருவருளை நுகருவதற்கு முத்தியடைய விரும்பும் ஒருவன் விரும்புவான், அவ்விருப்பமும் ஒருகாலங் கைகூடும். அங்ஙனம் கைகூடும் காலம்வரக் குருவும் வருவார். அங்ஙனம் வருபவர் சிவமே.

''குருவே சிவமெனக்
கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித்
தோரார்
குருவே சிவனுமாய் கோனு
மாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்ற
தோர் கோவே''

என்கிறுர் திருமூலநாயனுர். அச்சிவம் குருவடிவாய் வராது ஒழிவானேல் யாம் ஒன்றையும் அறியோம்.

எமது யாழ்ப்பாண நாடு செய்த தவத்தால் எமக்கு எமது காலத்திலே குருமூர்த்தம் எழுந்தருளியது. சிவயோக சுவாமிகளைப் பலரும் ''எனது குருநாதன்'' என்று உரிமை பாராட்டிக் கொண்டாடுவதிலிருந்து நாம் இதனை நன்கு உணரலாம். அச்சிவயோக சுவாமிகளுக்குங் குருமூர்த்தமாக எழுந்தருளிவந்தவர் செல்லப்பா சுவாமிகள் என்றுல் செல்லப்பா சுவாமிகளின் பெருமைதான் என்னே! அவர் வாழ்ந்த நாட்டின் பெருமைதான் என்னே! இப்பெருமையைத் திருமூலநாயனுர் திருவாக்கு நன்கு தெளிவாக உணர்த்துகின்றது.

''சிவயோகி ஞானி செறிந்த
அத் தேசம்
அவயோகம் இன்றி அறி
வோருண் டாகும்:
நவயோகம் கைகூடு! நல்
லியல் காணும்;
பவயோகம் இன்றிப்
பரலோக மாமே''

என்பது திருமந்திரம். அறிவோர் நிறைந்த, யோகிகள் நிறைந்த, நல்லியல்புகள் நிறைந்த பரலோகமாகவல்லவா நம்நாடு திகழ்கின்றது. செல்லப்பா சுவாமிகள் தந்த திரு இத்திரு.

செல்லப்பா சுவாமிகளை அறிவோரும் யோகிகளும்பேரருளாளனுகவே கண்டனர். அங்ஙனம் காணமுடியாதார் விசரனுகக் கண்டு திண்டாடினர். இவர்கள் தவமற்றவரே, அவர்கள் தலமுடையோரே!

செல்லப்பா சுவாமிகள் வாழ்ந்துவரும்போது அவருடைய திருவாயினின்றும் விலைமதிக்கவொண்ணுதமுத்துக்கள் சொரிந்தன. அவற்றை பலரும் பொறுக்கிக் கோத்துச் சொன்மாலைகளாக அணிந்துகொண்டனர்? சிவயோக சுவாமிகளும் அணிந்துகொண்டார்' இதனை அவர் தமது நற்சிந்தனைப் பாடல்களில் நன்ருக பல பல இடங்களிற் காட்டியுள்ளார். செல்லப்பா சுவாமிகளுடைய திருவாயிலிருந்தும் உதிர்ந்த முத்துமாலைகளுள் நான்கு மிக மிக சிறப்புடையன. அவை:-

### பண்டிதர் செ. சிவப்பிரகாசம்

1. முழுவதும் உண்மை.
2. ஒரு பொல்லாப்பும் இல்லை.
3. எப்பவோ முடிந்த காரியம்.
4. யாம் அறியோம்.

என்பனவாம்.

இம்மகா வாக்கியங்களுள், ''முழுவதும் உண்மை'' என்னும் மகா வாக்கியத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்பாம். இச் சிந்தனைகள் யாவும் முழுவதும் உண்மை என்பதாகிய மகா வாக்கியக் கருத்தை ஒருவாறு விளக்கும்.

உலகத்தில் அநாதியான பொருள்கள் 6 உண்டு அவை:

(1) ஏகனுகிய இறைவன்.
(2) அநேகமாகிய ஆன்மாக்கள்.
(3) இருளாகிய ஆணவமயம்.
(4) கன்ம மலம்.
(5) சுத்தமாயை, (6) அசுத்தமாயை என்பனவாம்.

இவற்றுள் அடங்கியுள்ள பதி, பசு, பாசங்களின் செய்திகளே உண்மையான செய்திகளாகும். இந்த முப்பொருள் பற்றிய தெளிவு ஞான யோகிகளுக்கு உண்டு.

உலகிலுள்ள பொருள்கள் யாவும் தோன்றி நின்று மறைகின்றன. உலகங்களும் அவ்வாறே. இம் மாற்றத்துக்குக் காரணமாகிய பொருள், உலகங்களின் வேருகவுள்ள கடவுள். அக் கடவுள் தமது சக்தியோடு பிரிப்பின்றி என்றும் நிற்பர். அவர் உருவமுள்ளவருமாவர்; உருவமில்லாதவருமாவர்; இரண்டுமாவர். எனினும் அக் கடவுள் இத்தன்மைகளைக் கடந்து அப்பாற்பட்டவராய் நிற்பர். அவர் திருவருள் ஞானத்தை வடிவமாகக் கொண்டும் இருப்பர். அவரின் சந்நிதி மாத்திரத்திலேயே அவரது முயற்சி ஒன்றும் இன்றி உலகம் தோன்றி ஒடுங்கும். அவர் உயிர்களின் நன்மைக்காகவே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்வர். இவற்ருல் அவர் விகாரி ஆகார். உயிரின் மலங்களை நீக்கித் தாணுக்கித் தன் மலரடிக்கீழ் வைத்தருளுவர். அவர் பல பெயர்களை உடையவராயினும் தாம் ஒருவரேயாவர். அவரை அறிந்து அருள்பெற்று உய்தலே உயிர்களின் செயற்கருஞ்செயலாகும், உயிர் சிவஞானமெய்தச் சிவஞானம் துணைபுரியும். அச் சிவஞானம் அவனருளாலேயே கைகூடும். அங்ஙனம் கைகூடச் செய்தற்கு நான் குருவடிவாக வந்திருக்கிறேன். இது முழுவதும் உண்மை. இதனை நீங்கள் (அடியார்கள்) உணர்வீர்களாக.

இனி, உயிர்அறிவுப்பொருள்-உடம்பின் வேருக உள்ளது. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூன்று பிரிவுகளுள் உயிர்கள் அடங்கும். சகலர், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களை உடையர். பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலங்களை உடையவர். விஞ்ஞானகலர் ஆணவமலம் மாத்திரமே உடையவர். இம் மூவகை ஆன்மாக்களும் சத்தினிபாத விசேடத்தால் பரிபாகமடைந்து (இருவினைஒப்பு, மலபரிபாகம் உடையவராய்) இறைவனின் திருவடியை அடைவர் அங்ஙனம் அடையச்செய்வதற்கு அவ்வுயிர்களுக்குக் குருவடிவில் இறைவன் எழுந்தருளிவந்து தீக்கை செய்து மலரடிக்கீழ்வைப்பன். அங்ஙனம் தீக்கைசெய்ய எழுந்தருளி இந்தச் செல்லப்பனுக இருப்பவனுகிய நான் இறைவனின் திருவருள் வடிவினன். இது முழுவதும் உண்மை.

உயிர்கள் உலக இன்பங்கள் பொய்யெனவும் திருவருளே மெய்யெனவும் உணர்ந்து கண்டு, தம்மைமறந்து, தீக்கை பெற்று, திருவைந்தெழுத்தை முறைப்படி ஒத, சிவஞானப் பேறு உண்டாகும். இது திருவருளால் நிகழ்ந்தது. அத்திருவருள் வடிவமாகச் செல்லப்பனுகிய நான் வந்துள்ளேன். இது உயிர்களை ஈடேற்றவேயாகும். இது முழுவதும் உண்மை.

இறைவனும் உயிரும் ஒன்றுமல்ல இரண்டுமல்ல இதன் உண்மை சிவஞானத்தால் மாத்திரம் உணரத்தக்கது. அச் சிவஞானத்தை அருளுபவன் குரு. அக்குருவாகச் செல்லப்பனுகிய நான் வந்துள்ளேன்; இது உயிர்களுக்குஅத்துவித உண்மைகளை உணர்த்துவதற்காகவே. இது முழுதும் உண்மை.

சிவஞானத்தைப் பெற்ருன் தன் செயலின்றிச் சிவன் செயலாய்ச் சிவத்தைக் காண்பதன்றிப் பிறபொருள்களைக் காணுன். வினை அவனை ஒரு போதும் பற்ருது. செல்லப்பனுகிய நான் சிவஞானத்தைப் பெற்றேன். பிறிதொரு பொருளையுங் காணேன். எங்கும் சிவத்தையே காண்கின்றேன். இது உயிர்களுக்குச் சிவத்தை உணர்த்தி அனுபவஞானம் ஏற்பட உறுதுணைபுரியும் என்பதனுல் முழுவதும் உண்மை.

இறைவனும் உயிரும் அறிவுப் பொருள். இறைவன் அருள், பிறப்பு, இறப்பு, சிற்றின்பம், பேரின்பம் ஆகிய இவற்றைக் கொடுப்பன். உயிர் இவற்றையேற்கும். இது இரண்டிற்கும் வேறுபாடு. செல்லப்பனுகிய நான் இறைவனேடுஇசைந்துள்ளேன். யாவருக்கும் அருள் செய்யவேஇவ்வுடலோடு இருக்கின்றேன். இதனை அறியவல்லவர் என் ஏச்சுப் பேச்சுக்களையும் பொருட்படுத்தாது அறிவர். அல்லாதார் மயங்கிவிலகுவர். இது முழுதும் உண்மை.

நான் சிவதொண்டன். நல்லூர்த் தேரடியிலும் அயலிலேயும் நடமாடி இறைபணி நிற்கின்றேன். கூத்தாடித் தட்டமிட்டுக் கும்பிட்டு வாழ்கின்றேன். இது முழுதும் உண்மை. நீங்களும் மெய்த் தொண்டர்களாய் முழுமுதற்பொருளை உணர்வீர்கள். இதுவும் முழுவதும் உண்மை.

இங்ஙனம் உண்மைப் பொருள்கள் எவை எவையோ, அவ்வுண்மைப் பொருள்கள் எல்லாவற்றையும் அறிந்தனுபவிக்க, நாம் இந்த அரிய மானிடப்பிறவியைப் பெற்றுள்ளோம். இப்பிறவியால் பெற வேண்டியவற்றைப் பெறுதல் முழுதும் உண்மை.


தமிழக சித்த மருத்துவக் கண்காட்சி மதுரையில் 17, 18-4-71-ல் நடைபெற்ற பொழுது நாங்கள் இவ்விடமிருந்து அனுப்பிய மருந்துகளைப் பரிசோதித்து, சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற மருந்துகள் எனப் பாராட்டி ''மருத்துவ மன்னன்'' எனும் அணி முறைப்பட்டம் கிடைக்கப்பெற்றது.

**மதன சஞ்சீவி லேகியம்**
(ஆண்களுக்கு மட்டும்)

வாலிப, வயோதிப அன்பர்களே!

உங்கள் உடல் நலனைச்சிறிது சிந்தித்து, சிறுவயதிலும், வாலிப வயதிலும் தெரிந்தும், தெரியாமலும் தவருன நட்பாலும் செய்கிற தவறுதல்களே இப்போது உங்களின் தசை, நாடி, நரம்பு, முதலிய சப்த தாதுக்கள் கெட்டு, நஷ்டமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, கண் எரிவு, தளர்ச்சி, கெட்ட கனவுகள், எடை குறைவு, முதுகு, கைகால்மூட்டுக்களில்வலி, பலஹீனம், பீதி, பயம், வெறுப்பு உண்டாகி, தாய், தந்தையரிடமும் சொல்ல முடியாமல் மன வேதனையும், கஷ்டமும் அடைந்து, நிம்மதி இல்லாமல் வாழ்கின்றீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், பலரிடம் வருடக்கணக்கிலும் சிகிச்சை பெற்றும் ஒரு பலனும் இல்லாமல் ஏமாந்தவர்களும் இனிக் கவலைப்படவேண்டாம்.

வியாதியஸ்தர்கள் எமது மதன சஞ்சீவி லேகியத்தை ஒரு புட்டி உபயோகிக்கும் பொழுதே பலனைக் காணலாம். எடை அதிகப்பட்டு இரத்த விருத்தியுடன் நாடி, நரம்புகள் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று வாழலாம். எடை கூடியவர்களும் நீரழிவு (பிளட் பிரசர் - Blood Pressure) பித்தக்கொதிப்பு உள்ளவர்களும் சாப்பிடலாம். ருசியானது, நம்பிக்கையானது' பத்தியமில்லை, ஒரே புட்டியில் குணம் காணலாம். இழந்த சக்தியை மீட்டு வீரியத்தையும், திரேக வளர்ச்சியையும் தரும், குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம்.

எமது முருகானந்தா வைத்தியசாலையின் இணையற்ற தயாரிப்பான மதன சஞ்சீவி லேகியம் சக்திவாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

ஒரு ருத்தல் ரூபா 27-00 அரை ருத்தல் ரூபா 14-00
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்

'மதன லேபனம்' ஜீவ நரம்புகளின் பலவீனத்தைப் போக்கச் சிறந்த ஔஷதம், வெளிப்பூச்சு மருந்து விலை ரூபா 5-50.

எந்த வியாதியாக இருந்தாலும்சரி என்னைக்கலந்து ஆலோசியுங்கள்
உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்

**முருகானந்தா வைத்தியசாலை**
104, செட்டியார் தெரு கொழும்பு-11


### சொற் சித்திரம்

தமிழ்ச் சொற்கள் அம்மொழியைப் பேசிய மக்களின் மன நிலைக்கேற்றவாறு அமைந்துள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ''செல்வம் தரித்திரம்'' என்ற இரு சொற்களுமாகும்.

எல்லா மக்களும் செல்வத்தை நிலையாமையின் ஒரு சின்னமாகவே கருதி வந்தனர், வருகின்றனர். ஆனுல் இதனைச் சிறப்புற வெளிப்படுத்தியவர்கள் நம்மவரே. செல்வந்தன் தரித்திரமாவதும், தரித்திரன் செல்வந்தனுவதும் சாதாரண வாழ்க்கையோட்டத்திற் காணக்கூடியதே. செல்வம் நிலையற்றது. அது எப்போதும் செல்வோம், செல்வோம் என்றே துடித்துக் கொண்டிருக்குமாம். தரித்திரம் என்பதும் அவ்வாறே. இது எப்போதும் தரித்திரோம், தரித்திரோம் என்று பறந்து கொண்டிருக்குமாம்.

எப்படியிருக்கிறது தமிழறிஞர்களின் அனுபவபூர்வமான மொழியறிவு. நிலையாமையின் சின்னங்களான இவற்றுக்கு நிலையான பொருத்தமான எழுத்துருவத்தைக் கொடுத்த இவர்களின் மதி நுட்பத்தை எவ்வாறு புகழ்ந்துரைப்பது.

-ஏகேஎன்

# நாவல் நூற்றாண்டு விழா ஆய்வரங்கு — ஒரு நோக்கு

சு. கலாபரமேஸ்வரன்

மிக நீண்ட காலத்தின் பின் ஈழத்து- குறிப்பாக வடமாநிலத்து இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர், விமர்சகர் அறிஞர்கள் பலரையும் கவர்ந்த காத்திரமானதும் சுவையானதுமான ஒரு இலக்கிய நிகழ்ச்சி இலங்கைப் பல்கலைக்கழகத்து யாழ்.வளாகத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ் நாவல் நூற்றாண்டு விழா ஆய்வரங்காகும். முதலாவது தமிழ் நாவல் தோன்றி நூற்றாண்டு நிறைவுறும் வேளையிலே, அந் நாவல் தோன்றிய மண்ணிலே உள்ள தமிழ் ஆய்வாளரோ- எழுத்தாளர்களோ- பல்கலைக் கழகத்தினரோ விழா எடுக்க முனையாதபோது இரண்டே வயதை எட்டிய யாழ்.வளாகம் விழா எடுக்க முனைந்தமையும், தமிழகத்திலிருந்து சிறப்புப் பார்வையாளரை அழைத்தமையும், பல்வேறு வகையிலும் விழாவை வெற்றிகரமாக நிறைவுற வைத்தமையும் வளாகத்தினரின் பெருமைப் படத்தக்க சாதனைகள். கடந்த மாதம் 19ம், 20ம் திகதிகளில் நாவல் ஆய்வரங்கு நடந்தேறிய வகை; விழாவிற் பங்கு கொண்டோரின் ஆய்வுக்கருத்துக்கள்; ஆய்வு முறைகள்; ஆய்வரங்குகளிற் பரபரப்புக்களை ஏற்படுத்திய இலக்கிய வாதப் பிரதிவாதங்கள் முதலான விடயங்கள் பற்றிய சில குறிப்புக்களைத் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வரங்குகளிற் கலந்து கொண்டோர் தமது விழா நினைவுகளை மீளாய்வு செய்யவும், பங்குகொள்ள முடியாமற் போனோர் பல்கலைக்கழக மட்டத்தில் இடம்பெற்ற சமகால இலக்கிய ஆய்வரங்கு ஒன்று எவ்வாறு நடந்தேறியது என அறிந்து கொள்ளவும் இக் கட்டுரை உதவும் என எதிர்பார்க்கிறேன்.

## விழாவின் பின்னணி

நாவல் ஆய்வரங்கு நிகழ்ச்சிகளுக்கு உட் செல்லமுன் விழாவின் பின்னணியை ஒரு சிறிது அறிந்திருத்தல் அவசியமானதாகும். திருநெல்வேலியிலே பல்கலைக்கழகச் சூழலிலே இலக்கிய ஆர்வலர்கள் கூடிக் கலந்துரையாடும் 'வியாழ சுகம்' என்ற இலக்கிய வட்டத்திலே எழுந்த நாவல் நூற்றாண்டு பற்றிய பிரஸ்தாபம், பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரின் சிறிய திட்டத்திற்கு அடி எடுத்துக் கொடுத்தது. தமிழிலே முதன்முதல் தோன்றிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் நாவல் 1879ம் ஆண்டிலேயே அச்சுருப் பெற்றபோதும், அது பூரண எழுத்துருவம் பெற்ற 1876ம் ஆண்டையே அதன் தோற்றகாலம் எனக்கொண்டு தமிழ் நாவலுக்கு நூற்றாண்டு விழா எடுக்கமுனைந்த தமிழ்த் துறையினரின் திட்டம் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட விழாக்குழுவினரின் அயராத உழைப்பினால் செயலுறுப் பெற்றது. தமிழ் நாவலின் ஒரு நூற்றாண்டுகாலப் பகுதியிலே ஏற்பட்ட பன் முகப்பட்ட வளர்ச்சியை விஞ்ஞானபூர்வமாகப் பல்வேறு கோணங்களிலே ஆயும் வகையிலும் அண்மைக் காலத் தமிழ்நாவல் பற்றிய அறுவடை மதிப்பீட்டை அளிக்கக்கூடிய கருத்துக்களை வெளிக்கொணர்தற்கு ஏற்படுத்தும் வகையிலும் ஆய்வரங்கினை அமைக்கவும், ஈழத்திலே தோன்றிய தமிழ் நாவல் பற்றிய நூல் விபரப்பட்டியலொன்றை விழாவின்போது வெளியிடவும் என ஆக்கப்பட்ட திட்டங்கள் செயலுருப் பெறத்தொடங்கின.

## விழா எழுந்தது

சென்ற ஆண்டு நவம்பர் மாதமளவில் நடைபெறவிருந்த இக் கருத்தரங்கு தமிழக எழுத்தாளரின் வருகை பற்றிய பிரச்னைகள், தொடர்ச்சியான வேலைநிறுத்தங்கள், பல்கலைக்கழக வகுப்புக்கள் தள்ளிப்போடப் பெற்றமை முதலாம் பல்வேறு காரணங்களால் தள்ளிப்போடப் பெற்றுச் சென்றபோதும் கூட இறுதியில் கடந்த மாதமளவிலேயே நடைபெறக் கூடியதாக விருந்தது. விழாக்குழுவின் இணைச்செயலாளர்களாக கலை இலக்கிய வட்டாரங்களில் நன்கு பரிச்சயமானவரும், ஆக்கத்திறமையும் இளமைத் துடிப்புமிக்கவருமான கலாநிதி சண்முகதாஸ், செயல் வீரரும் வெகுசனத் தொடர்பு முறைகளிற் கைதேர்ந்தவருமான திரு ஆர். சிவனேசச்செல்வன், கருத்தரங்க அமைப்புகளில் நிறைந்த அனுபவம் பெற்ற திருமதி சித்ரலேகா மௌனகுரு ஆகியோர் விளங்கினர். நாவலாய்விற் கைதேர்ந்த திரு. நா. சுப்பிரமணிய ஐயர் நாவல் பற்றிய நூல் விபரப் பட்டியல் தயாரிப்புக்குப் பொறுப்பாக விருந்தார். ஆய்வரங்கின் அமைப்பு வேலைகளில் பேராசிரியர் க. கைலாசபதியின் வழிநடத்தலின் கீழ் முழுமையாகச் செயற்பட்டவர்கள் இவர்கள்.

இருநாள் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய நாவல் விழாவில் பொது அரங்கு (Plenary sessions) ஒன்றும் ஆய்வரங்கு மூன்றுமாக நான்கு கருத்தரங்குகள் இடம்பெற்றன. முதல் நாள் காலை நிகழ்ச்சிகள்பொது அரங்காக அமைந்திருந்தது. மூன்று ஆய்வரங்குகளும் முறையே தமிழ்நாவல்வளர்ச்சி ஈழத்து தமிழ் நாவல்கள் தமிழ்நாவலின்பொதுப் பிரச்னைகள் என்ற தலைப்புக்களில் அமைந்திருந்தன. ஒவ்வொரு ஆய்வரங்கிலும் நான்நான்குகட்டுரைகள்படிக்கப் பெற்றன. ஆய்வரங்குகளிற் கட்டுரைகள் சமர்ப்பித்த பன்னிருவரில் ஒன்பதின்மர் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுபுரியும் பெருமக்கள் (இருவர் தமிழகத்தவர்); இருவர் ஈழத்து இலக்கியச் சுவைஞர்கள், ஒருவர் முழுநேர எழுத்தாளர்- தமிழகத்தவர். (ஈழத்து எழுத்தாளர்கள் எவரும் பங்குபெறுபவர் என்ற தோரணையில் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படாமை பற்றிய பிரச்னை இறுதி நாளன்றுஎழுந்தது) விழாக்குழு ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பது பற்றிய பொதுவான விளம்பர அழைப்பு முறையைக்கைக் கொள்ளாது தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு ஆய்வாளரிடமிருந்து கட்டுரைகளைப்பெற்றிருந்தது. ஏற்கனவே தட்டச்சேறிய ஆய்வுக் கட்டுரைப் பிரதிகள் ஆய்வரங்குகள் தொடங்கும்போதேயே பார்வையாளருக்கு அளிக்கப்பட்டன. பதிவுக் கட்டணத்தைச் செலுத்திப் பார்வையாளராகத் தம்மைப் பதிவு செய்தோருக்கு ஆய்வுக்கட்டுரைப் பிரதிகள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் கருத்தரங்குகளிலே கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். முன்புறத்தில் அமைந்திருந்த பேச்சாளர்களின் பகுதியினை அடுத்து சபையின் இருமருங்கிலும் பதிவு செய்த பார்வையாளர்கள் அமரவும், அதன் பின் பகுதியில் உள்ள சபையில் பொதுமக்களும் மாணவ மாணவிகளும் பிறரும் அமரவும் கூடியவகையில் சபை ஒழுங்குகள் சிறப்பாகச் செய்யப்பெற்றிருந்தன.

## விழாவின் தொடக்கம்

விழாவின் தொடக்கநாளான சனிக்கிழமை வளாக நுழைவாயிலிலிருந்து விழா மண்டபம்வரைக்குமான பகுதி இருமருங்கும் மாவிலை, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பெற்றிருந்தமை இனிய விழாச்சூழ்நிலையை ஏற்படுத்தியதுடன் வருகை தருவோரை இனிதாக வரவேற்பதுபோலிருந்தது. இராமநாதன் மண்டப வாயிலில் கலை இலக்கியங்களை உருவகம் செய்யும் வகையில் 'கோலம்' சிறப்புற அமைக்கப் பட்டிருந்தது. விழா தொடங்குவதற்கு இருநாட்களுக்குமுன்னர் இருந்தே தம்மைப் பார்வையாளராகப் பதிவுசெய்வதில் அக்கறைகாட்டி வளாகத்தை முற்றுகையிட ஆரம்பித்த இலக்கிய ஆர்வலரின் தொகை விழாமுதல்நாளன்று கணிசமான அளவு அதிகரித்திருந்தது. ஈழத்தின் பல பாகங்களிலும் பல்வேறு மட்டங்களிற் பணிபுரிகின்ற இலக்கிய ரசிகர்கள், பல்வேறு இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்ட எழுத்தாளர்கள், விமரிசகர்கள் பலரும் நீண்ட காலத்தின் பின் இத்தகைய விழாவொன்றில் ஒன்று கூடுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. தமிழகத்திலிருந்து மூன்று தமிழறிஞர்கள் எதிர்பார்க்கப்பட்ட போதும் நாவலாசிரியரான அசோகமித்திரன் அவர்களே கலந்துகொள்ளக் கூடியதாக விருந்தது.

சனியன்று காலை பத்துமணியளவில் விழாமண்டபம் நிரம்பியிருந்தது. விழாவிற் கலந்துகொண்ட கூட்டத்தினரிடை பல எழுத்தாளர்களைக் காணக்கூடியதாக விருந்தது. இளங்கீரன், டானியல், வ.அ. இராசரத்தினம், பெனடிக்ற் பாலன், சொக்கன், பாலமனோகரன், செம்பியன் செல்வன் முதலானோர் குறிப்பிடத் தக்கவர். கூடவே பல பிரசுரகர்த்தாக்கள், எழுத்தாளர் மன்றத்தினர், பத்திரிகை ஆசிரியர்களும் வந்திருந்தனர்.

பத்து முப்பதிற்குப் பேராசிரியர் கைலாசபதியின் தலைமையில் பொதுவரங்கு ஆரம்பமாகியது. திரு. ஆ. சிவநேசச்செல்வன் வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கிய விமரிசகர், தமிழ்த்துறைத்தலைவர், வளாகத்தலைவர் என்ற பல தோறணைகளிலே தலைமைதாங்கும் பொறுப்பை மேற்கொண்ட கலாநிதி கைலாசபதியின் தலைமைப் பேருரை மிகவும் காத்திரமான ஒன்றாக அமைந்திருந்தது.

(வளரும்)

# தமிழர்களின் பெருமைக்கு ஓர் இரசாயன விஞ்ஞானி



இலண்டன் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியின் "மெற்ற போலிக்" ஆய்வுப் பகுதியில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் கலாநிதி இ. நித்தியானந்தன், ஜீவதத்துவப் பரிணாமத்தில் தனிப்பட்ட ஆய்வு நடத்தி அதில் விசேட பயனும் சித்தியும் பெற்று தமக்கும் தம்ஆராய்ச்சி ஸ்தாபனத்துக்கும் மட்டுமல்லாமல் தமிழர்களுக்கும் இலங்கைக்குமே பெருமையைத் தேடித் தந்துள்ளார். அண்மையில் அவரது கலைக்கூடத்துக்கு விஜயம் செய்த இளவரசி மாக்கிறற் அம்மையாருடன் கலாநிதி நித்தியானந்தன் ஆராய்ச்சியின் ஒரு முக்கிய அம்சத்தைப்பற்றி உரையாடுவதைப் படத்தில் காணலாம். ஸ்தாபனத்தின் அதிபர் பேராசிரியர் லின்னும் படத்தில் காணப்படுகிறார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இரசாயனத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்று விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு. நித்தியானந்தன் 1966ம் ஆண்டு இங்கிலாந்து சென்று லண்டன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடாத்தி தம் துறையில் கலாநிதி பட்டம் பெற்றார். பின் மீண்டும் இலங்கையில் பணியாற்றி இலண்டன் பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பகுதியின் அழைப்பின் பேரில் இங்கிலாந்து திரும்பி மேற்படி ஆய்வு ஸ்தாபனத்தில் கடமையாற்றி வருகிறார்.

இங்கிலாந்தில் உள்ள (Open University) பல்கலைக் கழகத்தின் போதகராகவும் அப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனைச் சபையின் அங்கத்தவராகவும் இவர் பணிபுரிகிறார்.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும் சித்தன் கேணியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வருமாவர். இவரதுமனைவி இரசாயனத் துறையில்பட்டம் பெற்று லண்டனிலுள்ள மருத்துவஆராய்ச்சிநிலையத்தில் சிரேஷ்ட ஆராய்ச்சியாளராகப் பணிபுரிகிறார்.

# யாழ். பூங்காவில் கரடி!

— வர்ணம் —

யாழ். சுப்பிரமணியம் பூங்காவுக்குள் ஒரு பயங்கரக் கரடி!

பயப்படாதீர்கள். பலவருடங்களுக்கு முன்னர் நடந்தது இது. எந்தவருடமாய் இருக்கும் என்று நெற்றியைச் சுளிக்க வேண்டாம். அதைப்பற்றிக் கடைசியில் சொல்கிறேன்.

இந்தக்கரடி எப்படி அங்கே வந்தது என்று யோசிக்கிறீர்கள். இல்லையா?

அனுராதபுரம் காட்டில் இருந்து பக்கத்திலுள்ள ரயில் நிலையம் ஒன்றுக்குள் இரவு நேரத்தில் நுழைந்த இந்தக் கறுப்புக் கரடி அங்கே ரயில் நின்றபொழுதுஎவருக்கும் தெரியாமல் வண்டிக்குள் ஏறி அமர்ந்து கொண்டு விட்டது.

யாரோ குளிரில் கம்பளியைப் போர்த்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு சகபிரயாணிகள் இருந்துவிட்டார்கள்.

ஆனால் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் அது வந்து இறங்கிய போதுதான் எல்லாருக்கும் கிலி பிடித்து விட்டது.

'கரடி!, கரடி'' என்று பிரயாணிகள் கத்தவில்லை, அங்கிருந்த கார்டுகளும், போட்டர்களும் கத்த, ரயில் நிலைய அதிபரும் உதவியாளர்களும் ஆபீஸ் கதவுகளை இறுக்கி மூடிக் கொண்டு 'கம்' என்று இருந்து விட்டார்கள்.

போர்டர்களும் கார்டுகளும் ஆங்காங்கே பதுங்கிக் கொண்டார்கள். அவர்களைக் கரடி ஒன்றும் செய்யவில்லை. ஏனென்றால் அவர்கள் போட்டிருந்த கறுப்பு கோட்டுக்களைக்கண்ட கரடி இவர்களும் நம் இனத்தவர்கள்தான் என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்துவிட்டது.

பிரயாணிகள் யாரும் இறங்கவில்லை, கரடி இறங்கி வெளியில் போன பிறகுதான் அவர்கள் இறங்கினார்கள். அதன் பிறகுதான் ரயில் நிலைய அதிகாரிகளுக்கும்உயிர்வந்தது. பொலீசுக்கு டெலிபோன் பறந்தது.

பொலீஸ்படை துப்பாக்கிகளுடன் ரயில் நிலையம் வந்து சேர்ந்த போது கரடியைக் காணோம். ரயில் நிலைய வாசலில் நின்ற ஒரு டாக்சியில் கரடி போன்ற உருவம் உள்ள ஒருவர் ஏறிச்சென்றதாக யாரோ சொன்னார்கள்.

இந்தச் சம்பவத்தில் உண்மை உண்டா இல்லையா என்பதை விடுங்கள், பழைய காலத்து ரயில் பிரயாணியொருவர் சொன்ன விஷயம் இது. ரயிலில்பிரயாணம்செய்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இறங்கி கரடியொன்று டாக்சியில் புறட்பட்டுப் போன சங்கதி அன்று நகரம் முழுவதும் பரவி ஒரே பரபரப்பாக இருந்த வேளையில் யாழ் பஸ் நிலையத்துக்கருகில் பெரிய கரடித்தோல் ஒன்று கிடக்ககண்டெடுத்த பஸ்சாரதி ஒருவர் பொலீசாரிடம் ஒப்படைத்தார். இதை வைத்து ஆராய்ந்ததில் கரடித் தோலைப் போர்த்துக் கொண்டு யாரோ ரயிலில் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். இந்த ஆசாமி ஒரு கடத்தல் புள்ளியாக இருக்கலாம். அல்லது பொலீசாருக்கு 'டிமிக்கி' கொடுத்துத்திரியும் ஒரு பலே திருடனாகவும் இருக்கலாம். இவரைப் பற்றி ஆராயுமுன் இதில்சம்பந்தப்பட்ட டாக்சி யாருடையது? இப்படியெல்லாம் அதிகாரிகள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கையில் தான் சுப்பிரமணியம்பூங்காவில் கரடியொன்று பதுங்கிக் கொண்டு இருப்பதாக யாரோ ஓடிவந்து பொலீசில் சொன்னார்கள்.

(வளரும்)

தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—7

# தமிழின் சிறப்பை உலகறிய வைத்தவர்

வண. எம். ஏ. இரத்தினராஜா

பின்னர் வந்தவர் ஜி. யூ. போப் (G. U. Pope) என்ற ஆங்கிலேய குருவானவர். இவர் மெதடிஸ்த தமிழ் நாட்டிலே திருச்சபையின் சார்பில் தொண்டு செய்யவந்தவர். கிறிஸ்தவ தொண்டைச் செய்வதற்கென இவர் தமிழ் நாடு வந்தபோது, இவருக்கு வயது பத்தொன்பது. ஏறக்குறைய நாற்பத்திரண்டு ஆண்டுகள் இவர் தமிழ் நாட்டில் ஊழியம் செய்தார்.

தமிழ் மொழியைச் செவ்வேனே கற்றுத் தேறிய இவர் அம்மொழியின் சிறப்பை உலகறிய வைத்தவராவர். தேன் மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ முன்னோடியாய் நின்றவர் இவரே. திருக்குறள், நாலடியார், திருவாசகம்ஆகிய பெரு நூல்களை. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, மேலைத் தேசத்துக்குத் தமிழன் பெருமையை அள்ளிக் கொடுத்தவர் போப் ஐயர் அவர்களே. திருவாசகம், திருக்குறள், போன்ற வேத நூல்களை அளித்த தமிழர் உலகிலேயே உயர்ந்தவர்களாய் இருந்திருக்க வேண்டுமென இவர் கருதினர்.

பாடசாலைகள் மூலம் பரந்த கல்வியை வழங்க விரும்பிய போப் ஐயர், திருநெல்வேலியிலே ஒரு சிறந்த கல்லூரியை அமைத்தார். தமிழ், லத்தீன், கிரேக்கு, ஹீபுறு, கணிதம், தர்க்கம், தத்துவம் போன்ற பாடங்கள் அங்கு படிப்பிக்கப் பட்டன. நீலகிரியிலுள்ள "ஊட்டி" என்ற இடத்தில், பத்தாண்டுப் பாடசாலை ஒன்றை போப் ஐயர் நடாத்தினர். அம்மலைப் பிரதேசத்தில் வாழும் தோடர் என்ற இனத்தவரோடு அவர் நெருங்கிப்பழகினர். தோடருக்குப் பாட்டும் இல்லை. வசனமுமில்லை. அப்பாஷையை ஆராய்ந்த போப் ஐயர், அதற்கு ஓர் இலக்கணத்தையும் எழுதினர்.

திருக்குறளின் அறத்துப் பாலும் பொருட்பாலும் ஏற்கனவே வீரமாமுனிவரால் லத்தீன் மொழியில் வெளியிடப் பட்டிருந்தன. கிரால் என்பவரால், ஜேர்மன் மொழியில் திருக்குறள் முழுவதும் வெளியிடப்பட்டது. ஏரியல் என்பவர், பிரெஞ்சு மொழியில், ஒருபகுதியை மொழிபெயர்த்தார். எல்லிஸ் என்பவர் ஆங்கிலத்தில் ஒருபகுதியை மட்டும் மொழிபெர்த்தார். இந்நிலையில் திருக்குறளை முற்றுகப் படித்து, அது முழுவதையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து அளித்தவர் போப் ஐயரே.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தையும் போப் ஐயர் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பை அறிஞர் உலகம் ஏற்றுப் போற்றியது. இந் நூல்களை வெளிவிடுவதில் தமது சொந்தப் பணத்தையே போப் ஐயர் செலவுசெய்தார். தமிழ் நாட்டுக் கலைச்செல்வத்தையும், ஞானத்தையும் மேனாட்டாருக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பது இவரது பெரும் வாஞ்சையாகும். தம் பணமெல்லாம் செலவுசெய்து. தமிழ்வளர்த்த போப் ஐயர், "தமிழ்ப் புலமையே வறுமைக்கு நேரான வழி, என அடிக்கடி கூறுவதுண்டாம்.

பிற்காலத்தில், போப்ஜயர் ஒக்ஸ்வேர்ட்சர்வகலாசாலையில் தமிழ்ப் பண்டிதராய்க் கடமை ஆற்றினர். நாலடியாரை ஆங்கிலத்தில்மொழிபெயர்த்த போது, இவருக்கு வயது எழுபத்து மூன்று. அடுத்த பதது ஆண்டுகளுள், மணிமேகலை, புறநானூறு, புறப்பொருள் வெண்பா நூல்களையும் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

மிக முதுமைப் பருவத்தில் மறுமை எய்திய போப் ஐயர் தாம் இறந்தபின், தமது கல்லறையிலே' 'தமிழ் மாணவன்' என்ற சொற்கள் பொறிக்கவும் பட்டன. அவர் ஆக்கிய ஆங்கில-தமிழ் அகராதியும் அதிக மதிப்பைப் பெற்ற ஓர் நூலாகும்.

போப்ஜயர் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டை,

"தெய்வத் தமிழ் மறைச்
செய்ய மெய்ப்பொருளைச்
செந்தமிழ் பயிலா மைந்தர்
நன்குணரத்
தீங்கில தாகிய ஆங்கில
மொழியில்
பெயர்த்தினிதளித்துப்
பேரிசை நிறுவினன்
அன்ன பேரறிஞன்
யாரெனிற் கூறுதும்
ஆங்கில நாட்டுக்கு
அணியென உதித்து
அருந்தமிழ் அணங்கைத்
திருந்திய செவிலித்
தாயென வளர்க்கும்
நேயமிக் குடையோன்
கிறிஸ்தவ சமயக்
குருத்துவசீலன்
போப்பெனும் நாமம்
புனைந்த நாவலனே!

என்று புகழ்ந்து பாடினர் சரவணப்பிள்ளை என்ற புலவர்.

## நூல் விமர்சனம்

### கந்தபுராணம்-காசிபனுபதேசப் படலம்

தொகுப்பாசிரியர்: சொக்கன்

கந்தபுராணம் கற்கண்டு மலை போன்றது. அதனை முழுமையாக வழங்கினுல் மலைப்பு ஏற்படும்; சுவைப்பு நிகழாது. இதனை உணர்ந்து திரு. 'சொக்கன்' அவர்கள் கந்தபுராணம் என்ற கற்கண்டு மலையிலிருந்து காசிபனுபதேசப்படலம் என்ற சிறுதுண்டை உடைத்தெடுத்து நமக்கு வழங்கியுள்ளார்.

கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், வரலாறு, கட்டுரை முதலிய பல்துறைகளிலும் முன்னணியில் விளங்கும் திரு. 'சொக்கன்' அவர்கள் சமயத் துறையிலும் சிறந்திலங்குகிறார். அவர்களுடைய கைவண்ணத்திலே, நாயன்மார்க்கட்டு திருவாட்டி சரவணமுத்து அகிலாண்டம் அவர்களின் நினைவு வெளியீடாக கந்த புராணம் காசிபனுபதேசப் படலம் என்ற அன்பளிப்புச் சிற்றேடு வெளியாகியுள்ளது:

பதினெட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்நூல் நுழைவாயில், காசிபனுபதேசத திருப்பாடல்கள் ஆகிய இரு பெருங் கூறுகளைக்கொண்டது. நுழைவாயிலில் புராணம் என்பதன் விளக்கம், தமிழிற் புராணங்கள், கந்தபுராணம், கந்தபுராண அமைப்புமுறை, காசிபனுபதேசப்படலம் ஆகிய தலைப்புகளில் தொகுப்பாசிரியர் அருமையான ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். புராணம்பற்றி அனைவரும் அறிந்திருக்கவேண்டிய பொதுவான கருத்துக்களை ஆசிரியர் தமக்கேயுரிய எளிய நடையில் மிக அருமையாகத் தொகுத்து வழங்கியுள்ளார். நுழைவாயிலை அடுத்துக் காசிபனுபதேசப் படலத்துப் பாடல்கள் இருபத்தைந்தின் பொருட்சாரமும், இறுதியிற் பாடல்களும் தரப்பட்டுள்ளன.

கந்தபுராணம் முழுவதும் அறநெறிகளே உரைக்கப்பட்ட போதிலும் காசிபன் உபதேசப் படலத்தில் இது சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. சூரன் முதலாகிய சகோதரர்கள் தமது தந்தையராகிய காசிப முனிவரிடம் சென்று அறம் உரைக்கும்படி வேண்டுகின்றனர். அப்போது 'சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம்பொருள் மூன்றுள' என்று தொடங்கிப் பதி, பசு, பாசம் என்பவற்றின் இயல்புகளைக் காசிப முனிவர் உரைக்கிறார். பசு அறவழியில் நின்று பாசத்தை அறுத்துப் பதியை அடையும்வழிகளை முனிவர் தமது புதல்வர்களுக்குக் கூறுகிறார். அதனை விளக்கும்வகையில் கதைகூறத் தொடங்குகிறார்,

காசிபருபதேசமூலம்அறநெறியில் நிற்கும் பக்குவம்பெற்ற சூரன் முதலியோர் தாயாகிய மாயவள் அடுத்துவரும் படலத்திலே நிகழ்த்தும் உபதேசத்தின்மூலம் தீநெறிப் படர்கின்றனர். பிறக்கும் போது அனைவரும் நல்லவராகவே பிறக்கின்றனர். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற்பிறக்கையிலே நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே தங்கியுள்ளது என்பதற்குக் கந்த புராணம் எடுத்துக்காட்டாகும்.

கந்தபுராணத்திலே சைவ சமயதத்துவசாரமாகஅமைந்த இப்பகுதியைமட்டும் தனியே எடுத்து வாசகர்களுக்குவழங்கி நல்லாற்றுப்படுத்த முனைந்துள்ளார் பதிப்பாசிரியர் 'சொக்கன்' அவர்கள். 'கதையினை எடுத்துச்சொல்வேன்' என்று காசிப முனிவர் (கதை) கூறத் தொடங்கினர் என்ற பகுதியோடு நூலை ஆசிரியர் முடித்துள்ளார். இது வாசகர்கள் எஞ்சிய பகுதியையும் படிக்க வேண்டுமென்றஆவலைத்தூண்டும் தொடர்கதை – உத்தி முறையைஒத்ததாக உள்ளது.

இறந்தவர்களின் நினைவாக நடுகல் நாட்டும் மரபு மிகப் பழமையானது. போர்க்களத்திலே வீரமரணம் எய்தியோரின் பெயரும் பீடும் எழுதி மாலை சூட்டிய பிறங்குநிலை நடுகற்கள் வழிதோறும் இருந்தாகப் புறநானூறு பேசுகிறது. இம்மரபின வளர்ச்சியாக மன்னர் மீது பாடப்பட்ட மெய்க்கீர்த்திகள் தோன்றலாயின. பிற்காலத்தில் பொய்ம்மையாளரைப்பாடும் புலவர்கள் சிலவாய்பாடுகளின் அடிப்படையிற் 'கல்வெட்டுக்கள்' என்ற பெயரில் நூல்களை வெளியிடலாயினர் இன்றுநிலை பெறற்ற இக்கல்வெட்டுக்களை வெளியிடும்முறை அருகி, இறந்தவர் பெயரை நெடுங்காலம் நிலைக்க வழிவகுக்கும்வகையில் அறிஞர்தம் படைப்புகளை வெளியிடும் மரபு நிலைபெற்று வருகிறது. இப்புதிய துறையின் வளர்ச்சிக்குத் திரு. சொக்கன் அவர்கள் ஆற்றிவரும் பணி சிறப்பானது. தமது அன்னையின் நினைவாக நசிகேதன் என்ற தமது கவிதைப்படையலையும் திருவாட்டி இராமலிங்கம் அவர்கள் நினைவாக 'அறநெறி பா மஞ்சரி' என்ற பெருநூலையும் பதிப்பித்த சொக்கன். அவர்களின் நெறிப்படுத்தலில் இந்நூல் வெளியாகியுள்ளது.

இப்புதியமரபில் மேலும் பல நினைவு மலர்கள் மலர்க.

பி. நடராசன்





யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் எவ்வித வாழ்க்கைத் தரத்தையுடையவர்களானுலும்சரி தங்கள் அயராத உழைப்பிற்காக ஒவ்வொரு நாளும் அடுத்த நாளானது விடியும்வரை காத்திருக்கிறுர்கள்.

அதேபோல, ஸ்திரமான அபரிமித இலாபத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரும் எமது முதலீட்டுத் திட்டங்களில் தவராத நம்பிக்கை கொள்ளலாம், எமது முதலீட்டுத்திட்டங்கள் சூரியனைப்போல் பணத்துறையைப் பொறுத்த மட்டில் அளப்பரிய நன்மை பயப்பவை. காரணம், வரையறையற்ற இலாபகரமான பன்முக கைத்தொழில் வளங்களால் வலுவூட்டப்பட்டுவருகின்றன. பத்தாண்டு காலத்திற்குமேலாக புத்திசாலிகளான முதலீட்டாளர்கள் குறைபாடற்ற, பூரண காப்புடைய முதலீடுகளால் மேலான நன்மையடைந்துவந்துள்ளனர். இப்போது நீங்களும் இந்த நன்மைகளை அடையவென உங்கள் வசதியைக் கருதி உங்கள் அருகில் வந்துள்ளோம்.

குறுகியகாலம்

11%

வட்டியுடன் ஈடுசெய்த முதலை இலகுவாக திருப்பிப் பெறும் வசதி.

நீண்ட காலம்

16%

நிலையான 2 வருடங்களுக்கு வட்டி - 12% 3வருடங்களுக்கு -13% 4 வருடங்களுக்கு - 14% 5 வருடங்களும் மேலும் – 16%

மாதாந்தம் வட்டி பெறலாம்



உறவுஸ் அண்ட் புரொபர்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம் - இல 2-3, நவீன சந்தை, பெரியகடை.

கொழும்பு ஏச்பிரி கட்டடம், டி. எஸ். சேனநாயக மாவத்தை கொழும்பு 8 த. பெ. 1077.

தொலைபேசி 94356, 91471, டெலக்ஸ் –1208.

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
**எங்க பாட்டன சொத்து**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி—பத்மினி
**கோடீஸ்வரன்**

**RIO** (Jaffna) Daily 4 Shows
Last day
**Amsterdam Affair**
(Color)
From: 21-3-77
HELL TO ETERNITY

**REGAL** Daily at 10-30 A. M. 2-30
4-45 7-00 & 9-30 P. M. only
(JAFFNA)
Pierre Richard, Bernard Blier, Jean Rochefort
in
**The Tall Blond Man With One Black Shoe**
(Eastman Color)

**வின்ஸர்** 25-3-77 வெள்ளி முதல்
(யாழ். நகர்) சிவாஜி (இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி, உஷா நந்தினி,
வி. கே. ராமசாமி, சசிகுமார்
நடித்த
**மனிதனும் தெய்வமாகலாம்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: P. மாதவன்

கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
**அபூர்வ ராகங்கள்**

**ராஜா** சிவாஜி - ஜெயலலிதா
[யாழ். நகர்] நாகேஷ் - முத்துராமன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
இன்று மட்டும்
**கலாட்டா கல்யாணம்**
நாளை முதல் **தூக்கு தூக்கி**

7-வது வெற்றி வாரம்!
**மனோகரா** எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**ராணி** கண்ணப்பா - அஞ்சலிதேவி
[யாழ்நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
**டவுண் பஸ்** (புதிய பிரதி)

**ஸ்ரீதர்** ○ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ○ ஜெயலலிதா ○ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** இப்பொழுது நடைபெறுகிறது
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
○ முத்துராமன் ○ சுஜாதா
○ ஸ்ரீகாந்த் ○ மனோரமா
நடித்த
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**லிடோ** போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)


## எம். ஜி. ஆர் .....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியப்படுத்தவில்லை என்று 'அங்கு பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல நண்பர்கள் மனைவிமார்கள், குழந்தைகள். ஏன் ரசிகர்களே குழுமியிருக்கிறார்கள். ஆகையால் உங்கள் உடையை மாற்றிக் கொண்டு வாருங்கள் "என்றேன். அதன் பின் வேறு சட்டை மாற்றிக் கொண்டு மண்டபத்திற்கு வந்தார். கேள்வி பதிலுக்குமுன் வரவேற்பு சொல்லிலடங்காது. கேள்விகேட்க வந்தவர்கள் சிலர். பார்க்கவந்தவர்கள் பலர். இதனால் கேள்விசரியாக கேட்காது. பதிலும் சரியாகக் கேட்காது. குழந்தைகளின் அழுகுரல் ஒருபக்கம். பெண்களின் விமரிசனம் ஒரு பக்கம் இந்தக் குழப்பங்களுக்குள் பேட்டி முடிவடைந்தது. பேட்டியைப் பயன் படுத்தி எம். ஜி. ஆருடன் சினேகம் பூண்ட ஒரு பத்திரிகை ஆசிரியர் அவர் வந்த பத்திரிகை நிறுவனம் கொடுக்காத விளம்பரத்துக்கு மேலாக தன் பத்திரிகையில் போட்டு இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன் படுத்திக் கொண்டார். இன்னுமொரு நண்பர் இத்தருணத்தைப் பயன் படுத்தி எம். ஜி. ஆர். இலங்கையில் தங்கியிருந்தபொழுது அவரின் நிரந்தர ப்பத்திரிகைப் பொதுஜனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆகிவிட்டார். ஒரு படப் பிடிப்பாளர் எம். ஜி. ஆருடைய பாஷையில்பேசி அவர் செல்லுமிடமெல்லாம் சென்று படமெடுக்க ஆரம்பித்துவிட்டார். அதனால் அவர் ஈட்டியலாபம் அபரிமிதமானது. இப்படி பலரும் பலவிதத்தில் எம். ஜி. ஆர். வருகையைப் பயன் படுத்திக் கொண்டார்கள். இவர்களுக்கிடையில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப் பட்டவர்கள் நானும் எனது மனைவியும்தான். எம். ஜி. ஆர், இலங்கைக்கு வந்து செல்ல வேண்டிய இடங்கள் பல. கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள் பல. இதற்கிடையில் என்னைப்பிடித்தால்மேலும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செய்து பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்தவர்கள் பலர். இதன் பலனாக ஒருவர் பத்திரிகையாளர்களின் பேட்டி முடிந்த அன்று நள்ளிரவு டெலிபோனில் எம். ஜி. ஆரை திருகோணமலைக்கு அழைத்துக் கொண்டு வரவும். வராவிட்டால் பிறகு நடக்கிறது வேறை. ஆகையால் எம். ஜி. ஆரிடம் சொல்லி அழைத்துவரவும்" "என்றார். "அப்படியெல்லாம்செய்ய முடியாது. எம். ஜி. ஆர். ஒப்புக் கொள்ளமாட்டார்" என்றேன் அவர் பேச்சோடு நிறுத்தாமல் இரண்டுமூன்று தடியர்களோடு என் வீட்டிற்கு வந்து கதவை உடைக்க ஆரம்பித்து விட்டார். நான்உடனே பொலீசுக்கு டெலிபோன் செய்து அவரையும் தடியர்களையும் அகற்ற வேண்டியதாயிற்று.

## பாம்புக்கடிக்கு ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னென்ன குறிகள் காணப்படுமோ அவைகள் காணப்படும். ஆனால் விஷம் எட்டு மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாகும்.

### முதலுதவி

பாம்பு கடித்தால் பயம் ஏற்படுகிறது. பயமே அபாய நிலைக்குக் கொண்டு வருகிறது. முதலில் கடிவாய்க்கு மேல் பகுதியில் கட்டுப்போடவேண்டும். இதனால் விஷம் பரவுவதைத் தவிர்க்கமுடியும். வீக்கம் அதிகமானால் கட்டை சிறிது தளர்த்தலாம். கடித்த பாம்பைப்பார்த்தே விஷத்தின் தன்மையை நிர்ணயம் செய்ய முடியும். பாம்புக்கடிக்கு உள்ளான நபர் நடக்கக்கூடாது. கட்டில் அல்லது ஸ்டெச்சரில் போட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லவேண்டு. விஷமுறிவு மருந்து இருக்கிறது. இது விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகிறது. இதுதான் சிறந்தமருந்து என்று கூறமுடியும். கடித்த நபரை முதலில் போர்வையால் போர்த்த வேண்டும். கால்வைத்திருக்கும் பாகத்தை உடலைவிட உயர்த்தி வைக்கவேண்டும்.

### சிகிச்சை

குளுகோஸ் உப்புநீரை ஊசி மூலம் செலுத்தவேண்டும். அதிர்ச்சி அதிகமாக இருந்தால் உயிர் காக்கும் மருந்துகளான டிக்காட்ரான், மெப்பாடீன் ஆகியவை கொடுக்கவேண்டும். மூச்சுத்திணறல் இருந்தால் பிராணவாயு செலுத்த வேண்டும். விஷமுறிவு மருந்தை பாம்பின் வகையைப் பொறுத்து பத்து மில்லிமீட்டர் தண்ணீரில் கலந்து ஒன்று அல்லது இரண்டு சொட்டு அட்ரினிலினையும் சேர்த்து மெதுவாக நரம்புமூலம் இத்உடலுக்கு ஒத்துவருகிறதா என்பதை சோதனைசெய்த பிறகே கொடுக்கவேண்டும். அவசியம் இருந்தால் 6 மணி நேரத்திற்குப் பிறகும் ஒரு தடவை கொடுக்கலாம். இந்த நவீன சிகிச்சைமூலம் உயிரைக் காப்பாற்ற முடியும்.

—தினமலர்


**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-ஜமுனா
நடித்த
**மருதநாட்டு வீரன்**


# இலங்கையரைத் தேடி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குள் படகொன்றில் வந்தேன். நான் இங்கு விற்பதற்குக்கொண்டு வந்திருந்த 'கஞ்சா' பார்சலை என்னுடன் கூடித்திரிந்த இந்திய இளைஞர் என்னிடம் திருடிக் கொண்டு தலைமறைவாகிவிட்டாம. கையில் ஒரு சதம்கூட இல்லை. அணிந்திருக்கும் சாரமும், சேட்டும் தவிரவேறென்றும் என்னிடத்தில் இல்லை. நேற்று முழுதும் பட்டினியாகவே அலைகின்றேன். எங்கும் தேடித்திரிந்தும் அந்த இளைஞரைக் கண்டுகொள்ளமுடியவில்லை. 5000 ரூபா பெறுமதியானது அந்தக் கஞ்சா! என்று சொல்லிக்கொண்டேயிருந்தார் அந்த இளைஞன்.

"பாஸ்போர்ட்" இல்லாமலேயே இங்கு வந்துள்ளாயா என்று ஆச்சரியத்துடன் கேட்டபோது, இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தியாவுக்குள் வந்து ஒரு தடவை பிடிபட்டு 6 மாதங்கள் சிறைவாசமும் அனுபவித்தேன் என்றான் அந்த இளைஞன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தினமும் கள்ளக்கடத்தல் நடைபெறுவதையும், இதில் பலர் தினமும் இரு அரசுகளிடமும் அகப்பட்டுக்கொள்வதையும் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறேன். ஆனால் இப்படி ஒருவரை நேரில் சந்திப்பது இதுதான் முதல்தடவை.

இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி கள்ளக் கடத்தலை முறியடிப்பதில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல இந்தியாவில் கள்ளக்கடத்தலை தேசவிரோத நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதி, இதில் ஈடுபடுபவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் நீண்டகாலச் சிறைத்தண்டனையும் வழங்கப்படுகிறது. இப்படியிருந்தும் கள்ளக்கடத்தல் சர்வசாதாரணமாக தினமும்-அதுவும் சாதாரண மக்கள் மத்தியிலும் நடாத்தப்படும் 'ஒரு தொழில்' என்பதை அறிந்தபோது அரசாங்க அதிகாரிகளின் 'துரித செயற்பாடுகளை' நினைத்து கவலைப்பட நேர்ந்தது.

இந்த இளைஞனை அரசிடம் பிடித்துக்கொடுக்கவேண்டும் என்று மனம் சொன்னது. அதேவேளையில் நமது நாட்டு இளைஞன் அல்லவா? தாய்நாட்டுப்பபாசம் உதவிசெய்யத் தூண்டியது!

இப்போது என்னவேண்டும் என்றார் சிவா. திரிச்சியிலிருந்து இராமேஸ்வரத்துக்கு ரயிலுக்குப் போவதற்கு டிக்கட் எடுத்துத் தாருங்கள். இலங்கை போய்ச்சேர்ந்ததும் உங்கள் விலாசத்துக்கு அந்தப் பணத்தை அனுப்பிவைக்கிறேன் என்று அழுதான் அந்த இளைஞன்.

நண்பர் சிவா இரக்க சுபாவமுடையவர் - ஏதாவது கொடுத்துஇந்தப்பரிதாபத்தை அனுப்பிவிடுவோமா என்று சைகையில் கேட்டார் அவர்.

அந்த இளைஞரிடமிருந்து 'கள்ளக் கடத்தல்' தகவல்களை நான் பெற்றுக்கொண்டிருப்பதை அவரால்புரிந்துகொள்ள முடிந்ததோ தெரியவில்லை.

'இராமேஸ்வரத்துக்கு ரயில் டிக்கட் எடுத்துத்தந்தால் போதும்' என்று தொடர்ந்து கெஞ்சினான் அவன்.

ரயிலுக்கு எவ்வளவு என்றேன்? - 9 ரூபா 80 சதம் என்றான்.

நாம் என்ன பணத்தைக் கட்டிக்கொண்டா போயிருந்தோம். இதைக் கடவுளின் சோதனையாகவே கருதினோம்.

இறுதியில் டிக்கட் எடுத்துக் கொடுக்க முடிவுசெய்தோம்.

சிலோனில் நீ எங்கு இருக்கிறாய்? – மன்னாரில்.

அங்கிருந்து எபபடிவந்தாய்? -சிறிய மீன்பிடிப் படகில் இராமேஸ்வரம் வந்தடைந்து, அந்சப் பொருளை விற்பதற்காக திருச்சி வந்தேன்.

இராமேஸ்வரத்துக்கு டிக்கட் எடுத்துத் தந்தால் போதுமா?– ஆம். அங்கிருந்து எப்படி இலங்கை போயடைவாய்?

இராமேஸ்வரத்தில் பழக்கமான பலர் இருக்கிறார்கள். அங்கு போனால் போதும்-சாப்பாட்டுக்குப் பணம் எடுத்துக் கொள்வேன்.

அங்கிருந்து எப்படி இலங்கை செல்வாய்?

"மன்னாருக்கு தந்தி ஒன்று கொடுப்பேன் தந்தி கிடைத்ததும் வள்ளம் ஒன்று வரும்- ஏறிக்கொள்வேன்."

தந்தி எப்படிக்கொடுப்பாய்?

'குழந்தைக்குச் சுகமில்லை' என்று - இது அவர்களுக்குப் புரியும்.

ரூபா பத்துக் கொடுத்து அனுப்பிவைத்தோம்.

நாம் நாடு திரும்பி சரியாக இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இந்த மன்னார் இளைஞரிடமிருந்து எதுவித தகவலும் இல்லை. அவரது விலாசத்தையும் தவறவிட்டுவிட்டோம்.

(தொடரும்)



யாழ்ப்பாணம், ஞாயிறு 'சாய், ரமணி சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம். எதிர் வரும் செவ்வாய்க்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர்செல்வி.பி. ஆறுமுகம் இந்த அரங்கேற்றத்துக்கு. தலைமை வகிப்பார். யாழ் கலை மன்றம் திருமதி திரு யோகானந்தத்தின் மாணவிகளாகிய இவர்கள் திரு. திருமதி எஸ்: ராஜேந்திரம் தம்பதிகளின் புதல்விகள். என்பது குறிப்பிடத் தக்கது.

(உ)

சட்டமும் சமுதாயமும்—9

# பேரவை கலைக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்

செ. சிறீக்கந்தராசா

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்திலே, தேவையேற்கும் போது தேசிய அரசுப் பேரவையைக் கலைப்பதற்கும் ஏற்பாடு உள்ளது. தேசிய அரசுப் பேரவையின் அமர்வை நிறுத்துவதற்கான தத்துவமும் அதனைக் கலைப்பதற்கான தத்துவமும் சனாதிபதிக்கு உண்டென்பதை முன்பும் பலதடவைகள் கூறியுள்ளோம். தேசிய அரசுப்பேரவையின் அமர்வானது, இடை நிறுத்தப் பட்டிருக்கின்ற காலத்தில் தேசிய அரசுப்பேரவையைச் சந்திக்குமாறு (கூடுமாறு) அழைக்காமலே, தேசிய அரசுப்பேரவையைக் கலைத்துவிடுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் சட்ட ஏற்பாடு இருக்கின்றது. இத் தொடர்பில், அரசியலமைப்புச் சட்டத்தின் நாற்பதாம் பிரிவின் ஐந்தாம் ஆறும் ஏழாம் உட்பிரிவுகள் முக்கியமானவை. தேசிய அரசுப் பேரவையானது ஏதேனும் காரணத்தை முன்வைத்துக் கலைக்கப்பட்டால், அத்தகைய கலைப்பைப் பிரகடனம்செய்கின்ற பிரகடனம், தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பாராளுமன்றத்தேர்தல்கள் (தேசிய அரசுப் பேரவை தேர்தல்கள்) நடைபெறவேண்டிய தேதியையும் அல்லது தேதிகளையும் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வாறு தேர்தலுக்கான தேதியை நிர்ணயித்தால்மட்டும் போதாது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் குறிப்பிட்ட தேதியில் புதிய தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களை அழைத்தல்வேண்டும்.

தேசிய அரசுப் பேரவையானது சனாதிபதியினால் கலைக்கப்படவில்லை என்றும் நாற்பதாம் பிரிவின் ஓராம் உட்பிரிவின்படி, ஆறுண்டுக் காலம் கழிந்ததன் விளைவாகத் தேசிய அரசுப் பேரவை தன்பாட்டில் (Automatically) கலைந்துவிடுகின்றதென்றும் வைத்துக் கொள்வோம். இப்படியான சந்தர்ப்பங்களில், தேசிய அரசுப் பேரவை கலைந்துபோதலானது, அவ்வாறு கலைந்த தேதியிலிருந்து கணிக்கப்படும் நான்கு மாத காலங்களுக்குள் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களைத்தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்தும்படி கட்டளையிடுகின்ற சட்டப் பணிப்பாகச்செயற்படும். இவ்வாறு இருக்கும் சந்தர்ப்பங்களில் சனாதிபதி இரண்டு கடமைகளை புரியக்கட்டுப்பட்டவராகின்றார். முதலாவதாக, அவர் முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தி தேர்தல் நடைபெறுவதற்கானதேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல்வேண்டும். இரண்டாவதாக புதிய தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டம் நடைபெறுவதற்கான தேதியை அவர் நிர்ணயித்தல் வேண்டும்.

தேசியஅரசுப்பேரவை கலைக்கப்படுதல் என்பதன் கருத்து என்னவெனில் நடைமுறையிலிருக்கும் தேசிய அரசுப் பேரவையின் வாழ்காலம் முடிவடைந்துவிட்டது என்பதே. தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டால், தேசிய அரசுப் பேரவையில் நிகழ்ச்சிகளெதுவும் நடைபெறுத. பாராளுமன்றக் கருமங்கள் எவையும் கையாளப்படமாட்டா. அப்படியானல் அமைச்சரவையின் நிலைமை என்ன? தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களின் நிலைமை என்ன? கலைக்கப்பட்ட நிலையில் அமைச்சரவை உறுப்பினர்களை அமைச்சர்கள் என்று கூறமுடியுமா? தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களை எம்.பி.மார்(பா.உ.மார்) என்று அழைக்கமுடியுமா? அமைச்சர்கள் என்று அழைக்க முடியும்; எம்.பி. என்று அழைக்கமுடியாது. அமைச்சர்களைப் பொறுத்தவரையில், கலைப்புக்கும் புதிய தேர்தல் முடிகின்றவரைக்கும் இடைப்பட்ட காலத்தில் (Care taken Goverament) அவர்கள் அமைச்சர்களாகவே பணியாற்றுவார்கள். அமைச்சர்கள் என்ற தன்மையில் அவர்களுக்குரிய ஊதியத்தையும் பெறுவார்கள். அமைச்சரவையின் அமைச்சர்கள் பதவியில் இருக்கின்றவரைக்கும் பிரதி அமைச்சர்களும் பதவி வகிப்பார்கள் என்பதோடு ஊதியமும் பெறுவார்கள். முதலமைச்சர் அவரது பதவியைத் துறந்தால் அல்லது இறந்துபட்டால் அல்லது முதலமைச்சர் அவரது பதவியைத் துறந்துவிட்டவராகக் கருதப்பட்டால் அமைச்சரவை கலைந்துவிடும்; அமைச்சர்மாரும் பதவியை இழந்துவிடுவர். ஆனல் இதில் ஒன்றைக் கவனித்தல்வேண்டும். முதலமைச்சரின் இறப்பானது அல்லது பதவி துறப்பானது தேசிய அரசுப்பேரவை கலைக்கப்படுமுன்னர் நிகழுமாயின், அமைச்சரவை கலைந்துவிடாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் பதவியிலிருக்கும். சனாதிபதி அவ்வமைச்சர்களுள் ஒருவரை முதலமைச்சராக்கி அரசாங்கம் நடைபெறுமாறு செய்வார்.

''பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்; என்னாகும் மண்ணின் குடமுடைந்தக்கால்'' என்ற பழம்பாடலுக்கிணங்க, அமைச்சர்களுக்குத் தாழ்வில்லை. ஆனல் தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டால் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களை எம். பி.மார் என்று அழைக்கமுடியாது; அழைக்கப்படுவதற்கான உரிமை அவர்களுக்கு இல்லாது போய்விடும். அதுமட்டுமல்ல, எம். பி. என்ற முறையில் பெற்றுவந்த ஊதியத்தையும் இழந்துவிடுகின்றனர். கலைப்பின் விளைவை இதுவரை பார்த்தோம். கலைத்தல் தொடர்பில் ஏற்படக்கூடிய கயிறிழுப்புக்களை இனிக் காண்போம்.

---

இசை அரங்கேற்றம்

# நல்ல எதிர்காலம் உள்ள ஓர் இளம் பாடகி!

"மயில்"

அரங்கேற்றங்கள் பல. அவற்றை ஒழுங்கு செய்பவர்கள் சிலர் பணக்காரர்களாக இருந்துவிட்டால்— அதுவும் பரத நாட்டியஅரங்கேற்றமாக இருந்தால் பெண் எப்படி ஆடினல் என்ன, (ஆஹா ரொம்ப ஜோர்!)என்று பணத்திற்குத் தலைசாய்த்து விட்டுப் போய்விடுவார்கள். சங்கீத அரங்கேற்றமாக இருந்தாலும் பணம் பத்தும் செய்யும் என்ற ரீதியில் தாளக்கட்டில்லாமல் அபசுரத்தில், கீச்சிட்ட குரலில் பாடினலும் ''நன்ருகப் பாடிச்சுது பெண்'' என்று சொல்லி தலை அசைத்து விடுவார்கள்.

ஆனல் நான் இங்கு குறிப்பிடும் அரங்கேற்றம் பணம் படைக்காத ஒரு குடும்பத்தில் பிறந்த பெண்; ஆனல் தந்தை சங்கீதத்தில் ஈடுபட்டவர். தந்தையைப்பற்றி என்பிள்ளைகள் ''தேவார மாஸ்டர்'' என்றுதான் குறிப்பிடுவார்கள். அவர்கள் குறிப்பிட்டது போல் தந்தை குலசேகரம் தனது மகள் குலபூஷணியின் அரங்கேற்றத்தின் போது தேவாரம் பாடி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

பணம் இல்லாவிட்டாலும் பண்புள்ள குடும்பத்தில் பிறந்த பெண் செல்வி குலபூசணி. அதோடு இந்தக்குடும்பத்தில் அக்கறையும் அனுதாபமும் கொண்ட திரு. நல்லையா அவர்களால் முழுக்க முழுக்க ஒழுங்கு செய்யப்பட்ட அரங்கேற்றம். இங்குநல்லையா மாஸ்டர் செல்வி குலபூஷணியின் சங்கீத முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதையும் அயராது உழைத்ததையும் குறிப்பிடப் போனல் சொல்லிலடங்காது. தன் விடா முயற்சியால் செல்வி குலபூஷணியை ஒரு சங்கீத வித்துவான் ஆக்கிய பெருமை திரு. நல்லையா மாஸ்டரைச்சாரும் என்றல் அது மிகையாகாது. இப்படிப் பணம் படைக்காதவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு பலரகப்பட்டவர்களும் வந்திருந்தார்கள். சிலருக்கு ஆசனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(அது பணம் படைத்தவர்களுக்கு) சிலருக்கு தங்கள் இஷ்டம் போல் இருக்கலாம். இந்த செல்வி குலபூஷணி குலசேகரத்தின் அரங்கேற்றம் கடந்த 5-ம் திகதி சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. அன்று இசைமாரி பொழிவதற்குமுன் மழைமாரி பொழிந்தது. அதனல் அரங்கேற்ற நிகழ்ச்சியும் அரைமணி நேரம் தாமதமாகஆரம்பித்தது. இந்த அரங்கேற்றம் இருபிரிவாக இருந்தது. ஒன்று வீணை அரங்கேற்றம் மற்றது சங்கீத அரங்கேற்றம்.

முதலில் வீணை அரங்கேற்றம். இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கினர்கள். அவர் தனது தலைமை உரையில் செல்வி குலபூஷணியின் தந்தை குலசேகரம் அவர்களின் சங்கீத அரங்கேற்றத்தின் போது தான் கடம் வாசித்ததாகவும், திரு. ஜி. சண்முகானந்தம் வயலின் வாசித்ததாகவும், அன்று அந்த நிகழ்ச்சிக்கு வயலின் வாசித்த அதே வயலின் வித்துவான் ஜி. சண்முகானந்தம் குலசேகரத்தின் மகள் குலபூஷணியின் அரங்கேற்றத்தில் வயலின் வாசிப்பது மிகப் பொருத்தமாகும் என்றும்குறிப்பிட்டுசெல்வி குலபூஷணிக்கு தனது நல்லாசியைத் தெரிவித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். செல்வி குலபூஷணி முதலில் வீணை வாசித்தார். அந்த வீணை அரங்கேற்றத்தில் மூன்று உருப்படிதான் வாசித்தார் அதைப்பற்றி விமர்சிக்கப் போனல் இங்குள்ள 'பி' கிறேட் வீணை வாசிப்பவர்களைப்பார்க்க நன்ருக வாசித்தார் என்று தான் சொல்லலாம்.

ஆனல் சங்கீத அரங்கேற்றம் நான் எதிர்பார்த்ததை விட ஏன் சபையோர் எதிர்பார்த்ததைவிடநன்ருகஅமைந்துவிட்டது. ஹம்ஸத்வனி ராக கீர்த்தனையுடன் சங்கீத அரங்கேற்றம்அரம்பமாகிற்று. நானே ஒரு ரசிகன், சங்கீதம் கற்றவனல்ல. முறையாக தாளக்கட்டோடு அபசுரமில்லாமல் பாடும் கச்சேரிகளை ரசிப்பவன். இப்படியான எனக்கு செல்வி குலபூஷணியின் குரல் கணீரென ஒலித்ததும் ஏதோ ஒரு உற்சாகம் ஏற்பட்டது. இன்று நல்ல இசைவிருந்து கிடைக்கப்போகிறது என்று முடிவு கட்டிக் கொண்டேன். ஆனல் முதல் கீர்த்தனை என்னை அவ்வளவு ஆட்கொள்ளவில்லை. தொடர்ந்து செல்வி குலபூஷணி தீக்ஷிதர்கிருதிகளையும்கல்யாண ராகத் ஸந்தேஹமு என்ற தியாகராஜர் கீர்த்தனையைப் பாடியதும் நான் எங்கோ சென்னையில் இசைவிழா நிகழ்ச்சியில்இருப்பது போன்ற ஒருபிரமைஎனக்குஏற்பட்டது.

பாடல்கள் முடிவடைந்ததும் பாடகியை உற்சாகப் படுத்த அங்குமிங்கும் சிலரை வைத்து கைதட்டச் செய்து உற்சாக மூட்டுவார்கள் ஆனல் செல்வி குலபூஷணியின் பாடல்கள் ஒவ்வொன்றும் முடிவடைந்ததும் சபையோர்கள் ஏகமனதாக கைதட்டி தங்கள் ரசனையை தெரிவித்தார்கள். செல்வி குலபூஷணி குலசேகரத்தின் வித்துவத்தன்மை மேலோங்கும் என்பதில் சந்தேகமில்லை: இலங்கையில் செல்வி குலபூஷணியின் குரலுக்கு, ஆலாபனைக்கு, கீர்த்தனைகளின் உச்சரிப்புக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக மேடையிலிருந்து பாடும் எடுப்புக்கு பக்கவாத்தியக்காரர்களோடு இணைந்து பாடுவதற்கு செல்வி குலபூஷணிக்கு நிகர் செல்வி குலபூஷணிதான். இலங்கையில் ஒரு சிறந்த பாடகி உருவாகியுள்ளார் என்பது திண்ணம்.

---

## காசி ஆனந்தனை...

1ம் பக்கத் தொடர்ச்சி

என்ற போட்டியில் பலர் இடித்துத் தள்ளிக்கொண்டு முன் சென்றனர். கவிஞரின் கால்கள் புகையிரத மேடையில் படாத வண்ணம் இளைஞர் அவரை தோளில் சுமந்து வந்தனர்.

---


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு





# நன்றி நவிலல்

## அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம்

திருமதி ஜி. ஜி. பொன்னம்பலமும் அவரது குடும்பத்தினரும் காலஞ்சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் Q. C. அவர்களின் மரணத்தையொட்டி வீட்டுக்கு வருகை தந்து அன்னருக்குத் தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்ட உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சகலருக்கும், யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறையிலும் நடைபெற்ற மரணச்சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், துக்ககரமான அச் சந்தர்ப்பத்தில் பல்வேறு வகைகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். மாணச்சடங்கு ஏற்பாடுகளுக்கு உதவியாக இருந்த சகல நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், இயக்கங்கள் அரசாங்க நிறுவனங்களுக்கும் இவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். எல்லோருக்கும் தனித்தனியே நன்றி தெரிவிக்க முடியாமைக்கு இவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இல. 15, குயின்ஸ் வீதி,
கொழும்பு-3.

(5737)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna Telegram: Eelanadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.